விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

அன்பு வாசகர்களே...



கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு வலம்புரியின் பிரதம ஆசிரியர் எழுதும் பதில் கடிதம் உள்ளே...

வாசிக்கத் தவறாதீர்கள்...!

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 14 சனிக்கிழமை (27.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 039

அரச நிதி மோசடி

## கெஹெலியவுக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சகக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த ஆகியோரை எதிர்வரும் 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதம நீதவான் லால் ரணசிங்க பண்டார நேற்று அறிவித்தல் பிறப் 23

யாழில் உள்ள ஜனாதிபதி மாளிகை

## சுற்றுலா விடுதியாக மாற்ற விலை மனு கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

350 கோடி ரூபாய் செலவில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை இன்று வெறுமனே மூடப்பட்டிருக்கின்றது.

அதன் நன்மைகளை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அந்த மாளிகையை உயர்தரம் வாய்ந்த சுற்றுலா ஹோட்டலாக மாற்றுவதற்கு தற்போது சர்வதேச ரீதியாக விலைமனு கோரப்பட்டுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கம்பஹா நகரில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். கம்பஹா நகரில் நேற்று பிற்பகல் இடம் 23



இந்தியாவின் 69 ஆவது குடியரசுதின விழா யாழில் நடைபெற்ற போது ...

சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுக்கு

# இந்திய அரசாங்கம் உதவ வேண்டும்

யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் முன்னிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வினை பெற்றுக்கொள்வதற்கு இந்திய அரசாங்கம் எமக்கு உதவ வேண்டும் என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் முன்னிலையில் எடுத்துரைத்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமைப்பினர் 2 கோடி வாங்கியிருக்கலாம்

## நானும் சம்பந்தனும் பணம் வாங்கவில்லை - சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பு உறுப்பினர்கள்2கோடி பணம் வாங்கியிருக்கலாம். ஆனால் நானும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் பணம் வாங்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசிடமிருந்து 2 கோடி இலஞ்சமாக பெற்றுக் கொண்டதை பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனால் தில் இருந்தால் நிரூபிக்க முடியுமா? என சவால் விடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கடந்த ஆட்சி காலத்தில் பிரதமர் ரணிலிட 23

## மகிந்த, ரணில், மைத்திரி மூவரும் தமது ஊழலை மூடி மறைக்கின்றனர்

ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசாநாயக்க

(கொழும்பு)

தத்தமது ஊழல் மோசடிகளை மூடிமறைக்கவே மகிந்த - ரணில் - மைத்திரி மூவரும் முயற்சித்து வருகின்றனர்என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக .தெரிவித்தார்.

மகரகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே 23



வலுவான நிலையில் இலங்கை - இந்திய உறவு

## இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவு மிகவும் வலுவான நிலையில் உள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 69ஆவது குடியரசுதினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்திய இல்லத் 23

வவுனியா கற்பகபுரத்தில்

## 21 வயது இளம் பெண் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா கற்பகபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை குறித்த இளம் பெண்ணின் தாய். தந்தை இருவரும் உறவினர்களுடைய வீட்டிற்குச் சென்றுள்ளனர். வீட்டில்சகோதரனுடன் இருந்துள்ள 23

10 கிராம் ஹெரோயினுடன்

## யாழ்ப்பாணத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

யாழ். பொம்மைவெளி பகுதியில் வைத்து நேற்று மாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களிடமிருந்து பத்து கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. 23

## 10 டிரில்லியன் வெளிநாட்டுக் கடனில் அரச சொத்தாக ஒரு டிரில்லியன் மட்டுமே



### கடந்த 10 வருடமாக நிலைமை இது என ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 10 வருட காலப்பகுதியில் இலங்கை பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக்கடன் தொகை 10 டிரில்லியன் ரூபாய் அதாவது 10 இலட்சம் கோடி ரூபாயாகும். எனினும் அதில் அரச சொத்துக்களாக காட்ட முடியுமாக இருப்பது ஒரு டிரில் 23

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்

## கலை இலக்கியப் பண்பாட்டுப் பெருவிழா இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடத்தும் கலை இலக்கியப் பண்பாட்டுப் பெருவிழா இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று காலை 8.00 மணிக்கு பண்பாட்டு இயக்கத்தலைவர் ப.கு. சண்முகம் தலைமையில் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை 23

# Genius BIOLOGY

Tamil & English medium Classes

**2020 A/L** K.கலைவாணன் (Spl. in Biological Science)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

31.01.2018 புதன்கிழமை

அனுமதிகளை தற்பொழுதே பெற்றுக்கொள்ளலாம்

T.P: 071 343 8442 or 077 248 9507

தட்டாதெரு சந்தி, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(2579)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(2556)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


# 31–ம் நாள் நினைவஞ்சலி



அமரர் **ஆன் கிறேசி கபிரியேல்**

(மறைவு: சென்னையில்)

பிறப்பு: 25.09.1932

மறைவு: 27.12.2017

மறைவில் நாட்கள்
முப்பத்தொன்று ஆயினும்
மாறுமோ உங்கள்
நினைவலைகள்
உம்மை நித்தமும்
நினைப்போம் அம்மா!
எங்கள் இதயத்தில் இருத்தி
ஆராதனை செய்வோம்!!

உங்கள் பிரிவால் துயருறும்
V.பொன்சேக்கா (மேவிஸ்)

இல.12, செபஸ்தியான் வீதி,
பாசையூர்.

(2578)


# Study Engineering in INDIA



**Gnanamani College of Technology (GCT)**
**Affiliated to Anna University**

* B.E- Civil Engineering
* B.E- Computer Science and Engineering
* B.E- Electrical and Electronics Engineering
* B.E- Electronics and Communication Engineering
* B.E- Mechanical Engineering

கற்கைநெறிக் கட்டணம் ,தங்குமிட வசதி, உணவு உள்ளடங்களாக ஒரு வருடத்திற்கு LKR 250,000/=

Duration: 4 Years Medium- English

iCS Study Overseas

Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

(C-1391)

# நீங்களும் ஆசிரியர் ஆகலாம்

- Dip in Pre School Teaching
- Dip in Abacus IQ Teaching
- Certificate in Teaching English (primary)

மாதம் 40,000/= மேல் சம்பாதிக்க

**Basic Qualification A/L 3 Pass**

ஆறு மாதகற்கைநெறிகள் வெறும் 10,000/= ரூபாயுடன் நீங்கள் கற்கைநெறி ஒன்றை ஆரம்பித்து ஒப்பந்த அடிப்படையில் அத்துறையில் சம்பாதிக்கும் போது மிகுதிப் பணத்தை செலுத்தும் ஓர் அரிய சந்தர்ப்பம். உங்கள் கல்விச்சான்றுகளுடன் நேரில் வருகைதரவும்.

English Language Teaching College - International

இலவச கருத்தரங்கு
28.01.2018 காலை 10 மணி

**Soft View Computer Education**
Near Kachcheri, Jaffna. 0770743131

(C-1389)

**கார், வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை

தொடர்பு: 0710404978

(2580)

**A.A.C**
ஸ்ரான்லி வீதி (Dialog Office அருகாமை)

**இந்து நாகரிகம்**
ஜெயக்குமார்

A/L 2020, Day Class
சனி,ஞாயிறு
11.00 - 12.30
தொடர்பு: 0770690654

**காணி விற்பனைக்கு**

கச்சேரிக்கு அண்மையில் றக்கா வீதி, றக்கா ஒழுங்கை, சந்திக்கு அருகாமையில் 1 3/4 (ஒன்றேமுக்கால் பரப்பு) YMCA, கச்சேரியிலிருந்து 2 நிமிட நடை தூரத்தில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0768728556 காந்தன்

(2581)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

The Thinnai — An All Suite Boutique Hotel
GET — Gnanam Education Trust

# மாணவர்களுக்கான இலவச ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி

த திண்ணைஹோட்டல் ஞானம் எடியுகேஷன் டிரஸ்டின் அனுசரணையுடன் முற்றிலும் இலவசமான, 40,000/= பெறுமதியுள்ள 3மாத ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிநெறியொன்றை ஆரம்பிக்க உள்ளது. கீழ்காணும் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. முதலில் விண்ணப்பிக்கும் மாணவர்களே நேர்முகதேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

- வயதெல்லை - 18-25
- G.C.E. O/L
- ஆங்கில அறிவு

**Courses:** Food & Beverage and House Keeping

- விண்ணப்பப்படிவங்களை த திண்ணை ஹோட்டலில் பெற்றுக்கொள்ள முடியும்.
- விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி : 03.02.2018

அனுப்ப வேண்டிய முகவரி :
86, பலாலி வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. : 021 203 0400, 076 752 8628
மின்னஞ்சல் : hr@thethinnai.com

■ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டு தகுதியுடையோர் தகுந்த ஊதியத்துடன் தொழில் ரீதியாக உள்வாங்கப்படுவார்கள்.

(சி-2558)


# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகர சபை

## சபை நிதி - 2018

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம் மற்றும் வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழுங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத புட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்டகேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர்,மாநகரசபை,யாழ்ப்பாணம்.** (தொலைபேசி இல: 021 221 6468,021 222 2019) என்னும் முகவரியிலிருந்து மேலதிகதகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை 29.01.2018 - 12.02.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம** என்னும் முகவரியிலிருந்து 29.01.2018ம் திகதியில் இருந்து 12.02.2018 திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம** என்னும் முகவரிக்கு 12.02.2018ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்களுக்கு (16.04.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பானமுன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 08.02.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | JMC/ WD/017 CF.Bu/ 2018/01 | Contruction of Fencing Work (Coated Net) at Kallundai Stage 1 | 3.87 | 2 Months | C 8 | 50,000.00 | 91 days (till 14.05.2018) |

**தலைவர்/ ஆணையாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**26.01.2018**

(சி-1390)

# எல்லை தாண்டும் மீனவர்களுக்கு இலங்கையில் அபராதம் அதிகரிப்பு

## தடுக்கக் கோரி பிரதமருக்கு தமிழக முதல்வர் கடிதம்

(சென்னை)

எல்லை தாண்டும் மீனவர்களுக்கு இலங்கை அரசு அதிக அபராதம் விதிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கடிதம் எழுதியுள்ளார்.

எல்லை தாண்டும் மீனவர்களுக்கு இலங்கை அரசு அதிக அபராதம் விதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது.

நேற்றுக் காலை இந்திய கடல் எல்லையில் 2 விசைப் படகுகளில்மீன்பிடித்து கொண்டிருந்த புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபுரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

எல்லை தாண்டும் மீனவர்களுக்கு அதிக அபராதம் விதிக்கும் சட்டத்தை கொண்டு வர இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக சட்டமசோதா (24.01.2018) இலங்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த புதிய சட்டத்தின்படி இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழக மீனவர்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவார்கள்.

அதன்படி இலங்கை கடற்படையினால் சிறைபிடிக்கப்படும் இந்திய மீனவர்களுக்கு சிறைத்தண்டனையும் அபராதத்தையும் அதிகபடியாக உயர்த்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த புதிய சட்டத்தை இலங்கை அரசு அமுல்படுத்தாமல் இருக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இலங்கை சிறைகளிலுள்ள தமிழக மீனவர்கள் 108 பேரையும் 165 படகுகளையும் இலங்கை அரசு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக இரு நாடுகளின் அமைச்சர்கள் ஏற்கனவே இரண்டு முறை சந்தித்துப் பேசியுள்ள போதும் இந்த புதிய சட்டம் நிறை வேற்றப்பட உள்ளது துரதி ஷ்டவசமானது என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டத்தின்படி இலங்கை கடற்படையினால் சிறைபிடிக்கப்படும் இந்திய மீனவர்களுக்கு கோடிக்கணக்கில் அபராதம் விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)





## இலங்கையில் கடற்றொழில் சட்டங்கள் திருத்தப்படுவதை இடைநிறுத்தவும்

### தி.மு.க. வலியுறுத்தல்



(சென்னை)

இலங்கையில் கடற்றொழில் சட்டங்கள் திருத்தப்படுவதை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கமாறு, திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய வெளிவிவகார அமைச்சினை வலியுறுத்தியுள்ளது.

அதன்செயற்தலைவர்மு.க.ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடற்றொ ழிலில் ஈடுபடுகின்ற படகுகளுக்கான அபராதத் தொகையை அதிகரிக்கும் சட்டத்திருத்தம் குறித்து தாம் அதிர்ச்சியடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களை இலக்கு வைத்தே இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்த இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சியின் அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காதிருக்கிறது என்று ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

## மூன்று மாத காலத்திற்கு தேர்தல் ஒத்திவைக்கப்படும்

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

தபால்மூல வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தேர்தல் நடத்த முடியாத அளவிற்கு குழப்பநிலை அல்லது வேறேதும் பாதகமான சம்பவங்கள் இடம்பெற்றால் உள்ளூராட்சிமன்றத்தேர்தலை நடத்த முடியாமல் போகும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது குறித்து கட்சித் தலைவர்களுடனான பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சேவைகளை பகிஷ்கரித்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுமாயின் குறிப்பிட்ட



இடங்களில் தேர்தல் நடத்த முடியாத குழப்பநிலை ஏற்படும் பட்சத்தில் மூன்று மாத காலத்திற்கு தேர்தல் ஒத்தி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்திலும் நான் இந்த விடயத்தை குறிப்பிட்டேன் என ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-7)


## நேசமிகு தமிழ் பேசும் எமது மக்களுக்கு....

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் குறித்த எனது திடமான கருத்துக்களையும். திட்டங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

நான் பதினைந்து வருடங்களுக்கு மேலான ஆயுத வழிமுறைப் போராட்டத்திலும். முப்பது வருடங்களுக்கு மேலான தேசிய அரசியல் வழிமுறைப் போராட்டத்திலும் முழுமையான அர்ப்பணிப்போடும். உண்மையான உழைப்போடும் இடையறாது ஈடுபட்டு வந்திருக்கின்றேன். எனது ஆயுத வழிமுறைப் போராட்ட காலத்தில் புலிகள் உட்பட அனைத்துப் போராட்ட இயக்கங்களுடனும் பொது இணக்கப்பாடு காணப்பட வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாக இருந்தது. ஆனாலும். அக்காலத்தில் எனது இயக்கத்திற்கு உள்ளிருந்தும்(ஈ.பி.ஆர்.எல்.எவ்). சக இயக்க தலைமைகளிடம் இருந்தும் உரிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இதனால் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் திசைக்கொன்றாக சிதறி நின்றன.

இலக்கு ஒன்றாக இருப்பினும். போராட்ட வடிவமும். போராட்ட வழிமுறைகளும் வேறுபட்டன. அது துரதிர்ஸ்டமே. நான் அடைய முடியாத இலக்கு நோக்கி எமது மக்களை ஒருபோதும் வழிநடத்தியதில்லை. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை எமது மக்களுக்கு ஒருபோதும் வழங்கியதும் இல்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவும். அதற்கு பின்னரான சூழலில் நாடாளுமன்றத்தில் எமது அரசியல் பலத்தின் ஊடாகவும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையும். வாழ்வியல் உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் உண்மையாகவே உழைத்து வருகின்றேன். எல்லாக் காலத்திலும் நான் மக்களோடு வாழ்ந்து வருகின்றேன். அதனால். எமது மக்களின் உணர்வுகளையும். தேவைகளையும் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கின்றேன்.

எனது ஆயுத வழிப்போராட்டத்தின் ஊடாகவும். தேசிய அரசியல் நீரோட்ட வழிமுறை ஊடாகவும் கிடைத்த அனுபவங்களில் இருந்தே. எமது மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையூடாக நம்பிக்கையோடு தீர்வு காண முயற்சித்து வருகின்றேன். எனது அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு தீர்வுகளை கண்டும் இருக்கின்றேன். இருந்தும். போதிய அரசியல் பலம் எம்மிடம் இல்லாததால் இன்னும் தீர்க்கவேண்டிய எமது மக்களின் பிரச்சினைகள் ஏராளம் எஞ்சியிருக்கின்றன. அதேவேளை. நிலையான அரசியல் தீர்வும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

மக்கள் எந்தளவிற்கு என்னைப் பலப்படுத்தி. நான் முன்னெடுக்கும் வழிமுறையை பின்பற்றுகின்றார்களோ அந்தளவிற்கு பிரச்சினைகளை தீர்த்து. உரிமைகளைப் பெற்று. கௌரவமான. சமத்துவமான வாழ்வை நோக்கி நாம் முன்னேற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. காலத்திற்குக் காலம் வாக்குகளை அபகரிப்பதற்காக. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை கூறியும். தமது இயலாமையினாலும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விருப்பம் இன்றியும். அரசுகள் மீது மட்டுமே குறைகளை சுமத்தி. சுயலாப அரசியல் நடத்திவரும் தமிழ் தலைமைகள் போல் நானும் இருந்து விட முடியாது.

மக்கள் மத்தியில் வாழாதவர்களாகவும். கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தாதவர்களாகவும். சந்தர்ப்பங்களை உருவாக்க விரும்பாதவர்களாகவும். அரசியல் அதிகாரங்களை மக்களின் நலனுக்காக வினைத்திறனோடு செயற்படுத்த இயலாதவர்களாகவும். தமிழர்கள் இரத்தமும். தசையுமாய் நடாத்திய உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்களாகவும். இன்று இணக்க அரசியலின் பெயரால் ஏமாற்று அரசியல் நடாத்தி கொண்டிருப்போருக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. இந்த மாற்றத்திற்கு தலைமை ஏற்கும் தார்மீகப்பொறுப்பானது. இன்று என் மீதே சுமத்தப்பட்டுள்ளது. அதை நான் ஏற்கின்றேன். மாற்றுத் தலைமை என்பது இந்த மக்களோடு மக்களாக வாழாமல். மக்களுக்கு வெளியே இருந்து வருபவராகவோ. கடந்த காலத்தில் நாம் முன்னெடுத்த உரிமைக்கான போராட்டத்தை நேற்று வரை தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்து. அதை தமது பிழைப்பிற்காக மாத்திரம் பயன்படுத்தி கொண்டவர்களாகவோ இருக்கமுடியாது.

மக்களோடு வாழ்ந்து. மக்கள் அனுபவித்த வலிகளிலும். துயரங்களிலும் பங்கெடுத்து. தாயக மண்ணின் தன்மையறிந்து. தேவையறிந்து செயற்படும் செயல் வீரரே மக்கள் தலைவராக திகழமுடியும். அன்புக்குரிய மக்களே!... கடந்த காலத்திலும் இது போன்று நிதர்சனமாக நான் முன்வைத்த கருத்துக்கள் உங்களை முழுமையாக வந்து அடையவில்லை. அதற்கு சில தடைகள் இருந்ததையும் நான் மறுக்கவில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக அமையட்டும். இனி சரியான பாதையில் பயணிக்க அணிதிரண்டு வருவீர்கள் என்றும். வீணைக்கு வாக்களித்து உங்களை நீங்களே பலப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றேன்.

ஆற்றல் மிகு எங்கள் வழியில் உங்கள் வாழ்விடங்களை
அபிவிருத்தியால் தூக்கி நிறுத்திட...
மாற்றத்தை நோக்கி செல்லும் ஏற்றதொரு வாய்ப்பாக
இத்தேர்தலை பயன்படுத்திட...

இன்றே நிமிர்ந்தெழுங்கள்!
சாதித்த நம் கரங்கள் சரித்திரம் படைக்கும் நாளை!
வீணைக்கு வாக்களித்து விடியலைக் காணுங்கள்!

மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!
எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத
வடக்கு கிழக்கு எங்கள் தாயக பூமி!....
ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வு!



(அ-007)

என்றும் மக்கள் சேவையிலுள்ள
டக்ளஸ் தேவானந்தா பா. உ
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(உரிமையாளர் - V.M.K ஜுவல்லறி கண்டி வீதி, சாவகச்சேரி)

தோற்றம்: 1953.05.04 | மறைவு: 2018.01.26

கணபதிப்பிள்ளை புலேந்திரன் நேற்று (26.01.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-1392)

கண்டி வீதி.
சாவகச்சேரி.

தகவல்:-
குடும்பத்தினர்

### கம்மின்ஸ், ஹெட் அசத்தல்

# அவுஸ்திரேலியா ஆறுதல் வெற்றி

பட் கம்மின்ஸின் 4/24 பந்துவீச்சு பெறுதியும் ஹெட்டின் 96 ஓட்டங்களும் கைகொடுக்க அடிலெய்ட் ஒரு நாள் போட்டியில் அசத்திய அவுஸ்திரேலிய அணி, 3 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி எழுச்சி கண்டது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி நேற்று அடிலெய்டில் நடந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**திணறல் ஆரம்பம்**

இங்கிலாந்து அணிக்கு ஹேசல்வுட் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' ஜேசன் ரோய், ஜொனி பேர்ஸ்டோவ், 'டக்-அவுட்' ஆயினர். பின், கம்மின்ஸ் பந்தில் அலெக்ஸ் ஹேல்ஸ் (3), ஜோ ரூட் (0) சரணடைந்தனர். தொடர்ந்து அசத்திய ஹேசல்வுட் பந்தில், பட்லர் (0) வெளியேறினார். இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 5 முக்கிய விக்கெட்டுக்களை 8 ஓட்டங்களுக்கு இழந்து தத்தளித்தது.

**வோக்ஸ் ஆறுதல்**

பின் இணைந்த அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் (33), மொயீன் அலி (33) ஜோடி ஆறுதல் கொடுத்தது. பொறுப்பாக ஆடிய கிறிஸ் வோக்ஸ் (78) அரைசதம் கடந்தார். ரொம் கரண் (35), தன்பங்கிற்கு ஒத்துழைப்பு தர, இங்கிலாந்து அணி, 44.5 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் சார்பில் கம்மின்ஸ் 4, ஹேசல்வுட், அனட்ரூ ரை தலா 3 விக்கெடடுக்களைக் கைப்பற்றினர்.

**ஹெட் அரைசதம்**

சுலப இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் (13), சுமாரான ஆரம்பம் கொர்டுத்தார். கமரூன் வைட் (3), அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் (4) ஏமாற்றினர். மிட்சல் மார்ஷ் (32) ஆறுதல் கொடுத்தார். ஸ்டாய்னிஸ் (14) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய டிராவிஸ் ஹெட், அரைசதம் (96) கடந்து, சத வாய்ப்பைத் தவற விட்டார். பொறுபபாக ஆடிய ரிம் பெய்ன், அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி, 37 ஓவர்களில் 7 விககெட்டுக்களை இழந்து, 197 ஓட் டங்கள் எடுத்து 3 விக்கெட்டுக்களால் வெற்றி



பெற்றது. பெய்ன் (25), ரை (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித் 3 விக்கெட்டுக்களை கைப் பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ் தெரிவானார்.


## விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் மட்டும் பாவித்த Nestea, Nescofe தயாரிக்கும் மிஷின் விற்பனைக்கு உண்டு. (2582)

0779978332, 0770476236

## உங்கள் பழமை வாய்ந்த பொருட்கள்

புதிய அல்லது பாவித்த மாணிக்கக் கற்கள், இரத்தினக் கற்கள், கைக்கடிகாரம், பழமை வாய்ந்த சிலைகள் தகுந்த விலைக்கு வாங்கும் ஒரே ஸ்தாபனம். (2584)

உடன்டித் தொடர்புகளுக்கு:

071 059 9971


# மரண அறிவித்தல்



## தியாகராஜா தங்கராஜா

## (சின்னத்தம்பி)

(உரிமையாளர் - முருகன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 10.04.1938 | மறைவு: 23.01.2018

நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா தங்கராஜா கடந்த 23.01.2018 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - சவுந்தரம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவசோதிமலரின் ஆருயிர்க் கணவரும் மைதிலியின் (மஞ்சு - அவுஸ்திரேலியா) பாசமிகு தந்தையும் சுஜிதரனின் (அவுஸ்திரேலியா) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் தர்மராஜா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), விக்னராஜா (முருகன் மோட்டோர்ஸ்), லிங்கராஜா (சட்டத்தரணி - கனடா), பத்மராஜா (முருகன் மோட்டோர்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரிபூரணி (வத்தளை), அலன்சீத்தா (கம்பஹா), விஜயகுமாரி, பாமதி (கனடா), கமலாவதி, காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, புஸ்பம் - சிவசுப்பிரமணியம் (கனடா), சண்முகநாதன் மற்றும் நேசமலர் சண்முகராஜா (கனடா), பரம்சோதிமலர் சிவயோகநாதன் (கொழும்பு), ரோகினிதேவி - ஜினதாசா (குருநாகல்), பரமநாதன், ஜெகநாதன் (கனடா), பத்மாவதி துரைநாயகம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரியாந்தினி, நிலாந்தினி, கஜந்தினி, ராஜ்மோகன் (கனடா), குகராஜ் (கனடா), பால்ராஜ் (கனடா), காலஞ்சென்ற மகிழ்ராஜ் (கனடா) மற்றும் தயாவதி (கனடா), நந்தினி (கனடா), சுரேன் (கனடா), கண்ணன் (கனடா), விஷ்ணன் (நோர்வே), சுதாகரன் (கனடா), காயத்திரி (கொழும்பு) ஆகியோரின் சித்தப்பாவும் சுராஜ், சங்க, பார்த்தீபன் மயூரி, ஜசிந்த், மிலானி, ஜயந்தன், சஞ்சுதா, ஜதுர்ஷினி சந்திர அஜித் (குருநாகல்), முரளிதரன் (கனடா), ரமணன் (கனடா), சர்மிளா (கொழும்பு) ஆகியோரின் பெரியப்பாவும் செந்தூரி (கனடா), சஞ்ஜீவன் (கனடா), செந்தூரன் (கனடா), வர்ணன் (கனடா), சாரங்கன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (2583)

88/5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 5974, 077 668 9468




Pearson BTEC WOLVERHAMPTON UNIVERSITY at ALBANY UNIVERSITY OF CANBERRA RICS CIOB

**COMPUTING**
- Access (Degree Foundation Programme)
- BTEC HND in Computing
  - Network Engineering
  - Software Engineering
  - Applications Development
- BSc (Hons) in Computing
- BSc (Hons) in Management of IT

**MANAGEMENT**
- Diploma in Business Management (BMAC)
- BTEC HND in Business Management
- BTEC HND in Marketing
- BTEC HND in HR Management
- BA (Hons) in Business Management

**BUILDING STUDIES**
- CAD & BS
- BTEC HND in Quantity Surveying
- BSc (Hons) in QS (RICS)

**LEGAL STUDIES**
- LLB (Hons) in Law

**ENGINEERING**
- BTEC National Diploma in Engineering
- BTEC HND in Civil Engineering
- HND in Electrical & Electronic Engineering
- BSc / BEng (Hons) in Civil Engineering

**BIOMEDICAL SCIENCE**
- Foundation in Science
- BTEC HND in Biomedical Science
- BTEC HND in Biotechnology
- BSc (Hons) in Biomedical Science

**LANGUAGE & TEACHING**
- Diploma in English
- Certificate in English

**POSTGRADUATE STUDIES**
- Extended Postgraduate Diploma Level 7
- MBA
- MSc in Construction Project Management

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

UGC Recognized TVEC Approved

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

Jaffna Campus: 16, Point Pedro Road, Jaffna.
Corporate Office: 32, Dharmarama Road, Colombo 6. T: 0112597217
City Campus: 256, Galle Road, Colombo 6. 011 236 4459

021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


# ஆன்மீகக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியாரால், இன்று சனிக்கிழமை 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான "ஆன்மீகக் கல்வி கற்கை நெறிக் குழுவினருக்கான வகுப்பும் (பிற்பகல் 3.00 - 4.00) அதன்பின் மாலை 4 மணி முதல் 5 மணிவரை ஈசாவாஸ்ய உபநிடத விளக்கவுரையும்; யாழ். சின்மயா மிஷன், இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)


## வேலையாள் தேவை

நல்லூரில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு போட்டோ கொப்பி, பைண்டிங் தெரிந்தவர்கள் தேவை. பழக விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம். யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. (2572)

தொடர்புகளிற்கு:
077 117 1872

## காணி தேவை

K.K.S. மாவிட்டபுரம், வீமன் காமம், தையிட்டி, மயிலிட்டி போன்ற இடங்களில் 25-100 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை. (2552)

தொடர்பு:
077 480 1734

## Northsea Ltd
Fishnet Manufacturing Factory

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படும் கம்பனியொன்று.

### 2018 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள/ சேவைகள் வழங்கலுக்காக Northsea Ltd உடன் பதிவு செய்ய விரும்பும் பெயர் பெற்ற வழங்குநர்கள/ உற்பத்தியாளர்கள் /உள்ளூர் முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ,இத்தால் கோரப்படுகின்றன.

**கோர உத்தேசிக்கும் பொருட்கள்/ சேவைகள் விபரங்கள்.**

1. பலவகையான நைலோன் இழை டுவைன்/ நூல்.
2. மீன்பிடி வலைகள் (பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள்).
3. நைலோன் கயிறு 2mm இருந்து 30mm வரை.
4. PP கயிறு 2mm இருந்து 30mm வரை.
5. பிணை 6 இருந்து 10 வரை.
6. ஈயம் 10g,25g,50g.
7. மிதக்கும் பாரிய அளவிலான உருண்டைகள். 6,7,8,9.
8. நீலமாள மீன்பிடி வலைகள் அனைத்து அளவுகளும்.
9. நைலோன் நூல் பந்துகள் மற்றும் கழி.
10. குருலோன் நூல்.
11. மீன்பிடி படகுகள். (கண்ணாடி இழை மற்றும் மரத்தினாலான).
12. கட்டுமரம் (10,15 மற்றும் ஏனைய அளவு).
13. தெப்பம் (8,15 மற்றும் ஏனைய அளவு).
14. கண்ணாடி இழை வள்ளம் 15, 25 மற்றும் அளவு..
15. கடல் தோணிகள் (18 மற்றும் ஏனைய அளவு).
16. மிதப்புக்கள் (6,7 bar).
17. தூண்டில் (12 இலக்க அளவு)
18. தூண்டில் (10 இலக்க அளவு)
19. குள்ளா (16,18).
20. படகு இயந்திரம் (2.5HP,2.6HP,3HP, 8HP,15HP).
21. வலையை தயாரித்தல/ முறுக்குதல் இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள்.
22. பொதி சுமத்தல் (நாடளாவிய ரீதியில்) மூலப்பொருட்கள், பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள்.
23. மீன்பிடி வலை உற்பத்தியாக்கல் இயந்திராதி.
24. நிறமூட்டி இயந்திரங்கள், கொதிகலன்கள்.
25. நைலோன நூல் முறுக்கல் இயந்திராதி.
26. மீன்பிடி வலைகள் சீர்படுத்துவதற்கான நிறமூட்டிகள் மற்றும் ஏனைய இரசாயனங்கள்.
27. மின்சார மற்றும் இலத்திரனியல் உருப்படிகள்.
28. பொதியாக்கல் பொருட்கள் (பொலித்தன் பி.பி).
29. அச்சடித்தல் மற்றும் காகிதாதிகள்.
30. கணனி உதிரிப்பாகங்கள்.
31. அலுவலக உபகரணங்கள்.
32. அலுவலக தளபாடங்கள்.
33. பாதுகாப்பு சேவை.
34. கழிவறை துப்பரவாக்கல்.

ஆர்வமுள்ள வழங்குநர்கள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாகிய 1000 ரூபாவை அல்லது 10.00 அமெரிக்க டொலர்களை (வெளிநாட்டு வழங்குநர்களுக்கு ஏற்புடையது) கொழும்பு -03 காலி வீதி, 356 B ஆம் இலக்க 03 ம் மாடியிலிருந்து அல்லது லுணுவில, வீரவில அல்லது யாழ்ப்பாணம் குருநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் கொடுப்பனவு செய்து உரித்தான பதிவு செய்யும் படிவத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். உரித்தான துறையில் அனுபவம் உள்ள வழங்குநர்கள் மாத்திரமே பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். கம்பனியின் சுயவிபரத்தை இணைக்கவும்.

2018 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக வந்தடையும் வகையில் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் தலைவர், Northsea Ltd என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் உறையின் இடது பக்க மூலையில் **"2018 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்"** என எழுதப்படல் வேண்டும். ஒரு வழங்கல் சாதனத்திற்கு அல்லது சேவைக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு பதிவு செய்தல் வேண்டுமெனின் தனியான விண்ணப்பங்கள் அவ்வாறான பொருட்கள்/ சேவைகளுக்கு ஒரே உறையில் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே வழக்கமாக விலை மனுக்கள் கோரப்படினும் ஏனைய வழங்குநரிடமிருந்து விலை மனுக்களை அழைப்பதற்கான உரிமையை Northsea Ltd கொண்டுள்ளது.

தொழிற்சாலைகள் அமைந்துள்ள திட்டவட்டமான பிரதேசங்களில் இருந்தும் விலை மனுக்கூறுகளை பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்
Northsea Ltd,
356 B,3ஆம் மாடி,
காலி வீதி,
கொழும்பு-03.

(சி-171)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



20.01.2018 அன்று
விவசாய வீதி வடக்குப் புன்னாலைக்கட்டுவனில் நிகழ்ந்த
ராஜா பிளாசா மாதிரிக் கிராம முப்பது வீட்டுத் திட்ட வீடுகள்
கையளிக்கும் நிகழ்வின் பொழுது வீட்டுத் திட்ட பயனாளிகளி-
னால் செங்கைப்புரவோன் திரு.இ.குவேந்திரநாதன் அவர்களின்
தன்னலங்கருதாச் சமூக சேவையினைப் பாராட்டி
யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. நா.வேதநாயகன்
அவர்கள் முன்னிலையில்

## "ஈகைச்செம்மல்"


என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை
பாராட்டி அவரின் சேவை மென்மேலும் சிறக்க
நாமும் வாழ்த்துகின்றோம்.

(2569)

203,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
பெஷன் ஹவுஸ் .

# இந்தியாவின் 69 ஆவது குடியரசுத்தின நிகழ்வுகள் யாழில்



படங்கள்: ஐ.சிவசாந்தன்

இந்தியாவின் 69ஆவது குடியரசுத்தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றன. யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு யாழ்.கச்சேரி-நல்லூர் வீதியில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் இடம்பெற்றது. யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் .இந்திய தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தியதுடன் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் குடியரசுத்தின செய்தியையும் வாசித்தார். இந்திய பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் விதமான கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. சர்வமத தலைவர்கள், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## மாணவர்களுக்கு உதவி



(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின்லண்டன்பழைய மாணவர் சங்கக் கிளையின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாகவும், மாணவர்களின்எண்ணிக்கையினைஅதிகரிக்கும்நோக்கிலும் மாணவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

பாடசாலைஅதிபர் மு.கனகலிங்கம் தலைமையில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில்லண்டன்பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி வேலாயுதம் கிருபாகரன் கலந்து கொண்டு உதவிப் பொருட்களை வழங்கினார். (இ-60)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான முதலாவது பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் அனைத்து சிரேஷ்ட பிரஜைகளையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் த.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-7)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் சதா நிமலன் தலைமையில் இடம்பெறும். (இ-10)




## நுண்நிதி மற்றும் நுண்கடன் குறித்து வெளிப்படைத்தன்மை அவசியம்

### யாழ்.மேலதிக அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக நுண்நிதி மற்றும் நுண்கடன் தொடர்பான நடவடிக்கைகளின் தெளிவின்மை மற்றும் வெளிப்படைத் தன்மையற்ற நிலை காரணமாக அவற்றில் ஈடுபடுகின்றவர்கள் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக பொருள் பறிமுதல், தற்கொலை முயற்சிகள், இரவு நேரத்தில் துன்புறுத்தப்படல், குடும்ப உறுப்பினர்களின் பய உணர்வுகள் அதிகரித்து வருகின்றன. எனவே இச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புக்கூறல், நம்பகத்தன்மையான செயன்முறைகளை பயனாளர்களிடையேயும் சமூகங்களுக்கிடையேயும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமானதென உணரமுடிந்தது.

அதேவேளைநுண்நிதிகடன் பெறும் பயனாளர்களும் தமது நடவடிக்கைகளை முதலீட்டுத் திட்டத்தை தயாரித்து தெளிவான முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனவே எதிர்காலத்தில் எந்தவொரு கடன் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களும் மாலை 5 மணிக்குப் பின்னர் பயனாளர்களின் வீடுகளுக்குச் செல்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் 2018.01.26 ஆம் திகதியிலிருந்து இப் பாதிப்பு நிலையை தவிர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கியானது மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் மாவட்ட செயலகத்தில் ஆலோசனை வழங்கும் அலகினை ஆரம்பித்துள்ளது. இவ் அலகானது மாவட்டச் செயலகத்தில் 15 ஆம் இலக்க அறையில் இயங்குகின்றது.

இது தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் காணப்படின் நேரடியாக தங்களது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து இவ் அலுவலகத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ளலாம். இது தொடர்பானவிபரங்கள்மற்றும்ஆலோசனைகள் தேவைப்படின் 021 222 5000 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப்பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ

## கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வடக்கு வாசல் கோபுர கும்பாபிஷேக ஸ்ரீ சக்கர மஹா மேருப் பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணியளவில் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக்குருக்கள் தலைமையில் இடம்பெறும் (இ-8-10)

## நயினாதீவில் தைப்பூச விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய தைப்பூச விழா எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றையதினம்அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என நயினாதீவு அமுதசுரபி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)



அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி பிரான்பற்றில் வேட்பாளர் (பிரான்பற்று வட்டாரம்) கு.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து வழங்கினர்.

## சாய்பாபாவின் திருவுருவ பிரதிஸ்டையும் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சத்திய சாய் சேவா நிலைய சீரடி சாய்பாபாவின் திருவுருவ பிரதிஸ்டையும் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கிராம தேவதை வழிபாட்டுடன் சாய்பாபா எந்திர பிரதிஷ்டை இடம்பெறும்.

மறுநாள் காலை 5 மணியளவில் பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து 7.52 தொடக்கம் 8.02 மணி வரையிலான சுப வேளையில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும் சாய்பாபாவின் திருவுருவ பிரதிஸ்டையும் இடம்பெறும். (இ-10-19)

# கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கு வலம்புரி ஆசிரியரின் பதில்




மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே! எங்கள் பத்திரிகைப் பணி பற்றி நீங்கள் எழுதிய வரிகள் என்றும் எங்களை வாழ வைக்கும். அதேநேரம் பத்திரிகைப் பணியில் நாம் ஈடுபட்டதனால் நாங்கள் பட்ட அவஸ்தைகள் கொஞ்சமல்ல. நாலாம் மாடி முதல் நீதிமன்ற வழக்கு வரை என்று எங்களை ஆட்டிப் படைத்த சம்பவங்கள் ஏராளம்.

ஆனாலும் இறைவன் மீது நாம் கொண்ட அளவற்ற நம்பிக்கையும் உங்கள் போன்ற சான்றாண்மைப் பெரியவர்களின் ஆசியும் எங்களைக் காப்பாற்றுகிறது.

அண்மையில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா அவர்கள் எமக்கு எதிராக ஆளுநருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்தார். பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும் ஒருவர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருப்பது எங்ஙனம் என்பதே அவரின் முறைப்பாடு.

தனது முறைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக, இராணுவத் தளபதி ஒருவரால் எமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நீதிமன்ற வழக்கை கோடிட்டு அதன் பிரதியையும் ஆளுநருக்கு அனுப்பி வைத்தார். கூடவே தனது முறைப்பாட்டுப் பிரதியை முதலமைச்சருக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பத் தவறவில்லை.

எம்மை எப்படியும் ஆசிரியப் பணியில் இருந்து விலத்திக் காட்டுகிறேன் என்ற சபதத்தோடு சி.தவராசா அவர்கள் செயற்படுகிறார்.

வடக்கு மாகாண சபையிலும் கல்வி அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் இதனையே கதைக்கும் எதிர்க்கட்சித் தலைவர் வேறுபல அபிவிருத்தி விடயங்களையும் கதைத்திருந்தால் அது பிரயோசனமாக இருந்திருக்கும்.

ஆனால் தமிழரசுக் கட்சியில் இடம்பிடிப்பதற்காக, இவ்வாறான தேவையற்ற வேலையில் அவர் ஈடுபடுகிறார் என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அதேவேளை எங்கள் வழக்குத் தொடர்பான ஆவணங்களை அவருக்கு எடுத்துக் கொடுத்தவர் யார் என்பதை நாம் சொல்லாமல் நீங்கள் ஊகிப்பீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

அட, உங்கள் சொந்த விடயத்தை இதில் ஏன் எழுதுகிறீர்கள் என்று நீங்கள் கேட்டால் நாங்கள் மௌனமாக இருப்பது தான் ஒரேவழி. ஆயினும் அரசியல் திருகுதாளங்களில் தங்களை அற்புதமான அறிவாளிகளாகக் காட்டிக் கொள்ள விரும்புபவர்கள் அரசியலில் என்ன வேலை செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும், என்பதற்காகவே எல்லைக் கோட்டைக் கடந்து எங்கள் சொந்த விடயத்தை முன்வைத்தோம் அதற்காக மன்னிக்கவும்.



மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே! இம் மடல் மூலம்; தங்களுக்கு ஐயம் தந்த கேள்விக்கான பதில் கிடைத்திருக்குமென நம்புகின்றேன்.

25 புள்ளிகளுக்கான கட்டுரை 300 சொற்களுக்குள் அமைய வேண்டும் என்பதாக இருந்தாலும் கட்டுரையின் நீட்சி புள்ளிகளைக் குறைக்காது என்பது தாங்கள் அறியாததல்ல.

எனவே முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தலைமைத்துவப் பண்பைச் சுட்டி நிற்கும் இப் பதில் மடலில், தமிழினத்தோடு சார்ந்த சில விடயங்களையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்துடையது என்பதால் இம் மடலை விரித்துரைக்கத் தலைப்பட்டுள்ளோம்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சுமார் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் என்ற மிக உயர்ந்த விருப்பு வாக்குகளைப் பெற்று வடக்கு மாகாணத்தின் முதலமைச்சரானவர்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவராக சுமார் 15 ஆண்டுகள் இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கின் முதலமைச்சராகப் பதவியேற்ற போது அதுகண்டு உச்சமாகப் பெருமிதம் அடைந்தவர்களில் கம்பவாரிதியும் ஒருவர் என்பது உண்மையான செய்தி.

அதற்கு ஆதாரம் என்ன? என்று யாரேனும் கேட்டால் நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சராக வரவேண்டும் எனக் க்ம்பவாரிதி ஆதரித்து எழுதிய கருத்துரைகள் தான் ஆதாரம் என்பேன்.

கால ஓட்டத்தில், பொய்யுரைப்பவர்களின் விசமத்தனமான பிரசாரங்கள் கம்பவாரிதிக்கும் முதலமைச்சருக்குமிடையிலான உறவை சற்றுத் தள்ளி வைத்ததாயினும் நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே சான்றோர் சினம் என்ற தத்துவத்துக்கு அமைய உங்கள் இருவரினதும் உறவு மீண்டும் வலுக்க வேண்டும் என்பதும் அவ்வாறு உங்கள் உறவு வலுப்பது தமிழினத்திற்குப் பெரும் பேறாக அமையும் என்பதும் என் தாழ்மையான கருத்து.

இவை ஒரு புறம் இருக்க, முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நடவடிக்கையானது ஒரு சாதகமான சமிக்ஞையை ஏற்படுத்துவதற்கானது. எடுத்த எடுப்பிலேயே இந்த நாட்டின் அதிகாரத்தில் இருப்பவருடன் பகைத்துக் கொள்வதென்பது ஒரு ஆரோக்கியமான செயல் அல்ல என்ற அடிப்படையில் முதலமைச்சர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றார். இதனை தவறான ஒரு செயல் என்று தாங்கள் நிராகரிக்கமாட்டீர்கள் என்பது எமது திடமான முடிபு.

இன அழிப்புச் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவி ஏற்கமாட்டேன் என சி.வி.விக்னேஸ்வரன் பகிரங்கமாகக் கூறியதாக, நீங்கள் எழுதிய மடலில் குறிப்பிட்டிருந்தீர்கள்.

அத்தகவலானது தங்களுக்கு யாரோ தவறாகத் தந்திருக்கலாம் என்றே நாம் கருகின்றோம்.

அதேநேரம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் போது தன் குடும்ப உறவுகளையும் அந் நிகழ்விற்கு அழைத்துச் சென்றிருந்தார் என்பதைக் குறைப்படுத்தி எழுதியிருந்தீர்கள். இஃது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

பெற்ற தந்தை முதலமைச்சராகப் பதவி ஏற்கும் போது பிள்ளைகள் அந்நிகழ்வில் கலந்து கொள்வது தவறா? அதில் நியாயத்திற்கு விரோதமான செயல் ஏதும் உண்டா? என்பது ப்ற்றி என் சிற்றறிவுக்கு எதுவும் தெரியவில்லை.

இந்தியாவின் பிரதமராக நரேந்திரமோடி அவர்கள் பதவி ஏற்ற போது அவர் முன்னிலையில் அவரைப் பெற்ற தாய் வீற்றிருந்தார், பதவியேற்ற கையோடு பிரதமர் நரேந்திர மோடி தன் தாயின் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றார்.

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது அவரின் குடும்பத்தினர் முன்னாசனத்தில் இருந்தனர். தன் மூத்த சகோதரனின் காலில் வீழ்ந்து மகிந்த ராஜபக்ஷ ஆசி பெற்றார்.

இப் போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி ஏற்கும் போது அவரின் குடும்பத்தினர் பிரசன்னமாகி இருந்தனர்.

அவரின் மகள் ***ஜனாதிபதி அப்பா*** என்றொரு புத்தகத்தை எழுதியிருந்தார். இது தவிர, உலக அளவிலும் பதவியேற்பு வைபவங்களின் போது பதவி ஏற்பவர்களின் குடும்பத்தினர் பிரசன்னமாக இருப்பது வழமை.

இந்த வழமை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குப் பொருந்தாது என்று தாங்கள் கருதியது பற்றி உண்மையிலேயே எனக்கு விளங்கவில்லை.

முதலமைச்சரின் பதவியேற்பு வைபவத்தில் ஏனையவர்களும் கலந்து கொண்டிருக்கலாம். அவர்களையும், அழைத்திருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்படுமாக இருந்தால் அது ஏற்புடையது.

(திங்கள் தொடரும்)

# கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் கேரளக் கஞ்சாப்பொதியுடன் ஒருவர் கைது

(மல்லாவி )

கிளிநொச்சி/ முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக் கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் இயங்கி வரும் "விசேட முறியடிப்புப் பொலிஸ்" படைப்பிரிவின் பொலிசாரினால் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் வைத்து இரண்டு கிலோ கேரளக் கஞ்சாப் பொதியைக் கைப்பற்றியுள்ளதுடன் புதுக் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 38, வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக கிளி நொச்சி /முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதி பரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.30, மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில், மேலும் தெரியவருவதாவது

கிளிநொச்சி/முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக் கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் இயங்கி வரும் "விசேட முறியடிப்புப் பொலிஸ்" படைப் பிரிவின் பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை யடுத்து, கிளிநொச்சி/ முல் லைத்தீவு ஆகிய மாவட் டங்களுக்கான பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய விசேட முறியடிப்பு பொலிஸ் படைப் பிரிவின் பொலிஸ் பொறுப் பதிகாரி

டீ, எஸ். காலியான தலை மையில் பொலிஸ் கொஸ் தபால்கள், அடங்கிய பொலிஸ் அணியினரே இந்த கேரளக் கஞ்சாவைக் கைப்பற்றி யுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ள கஞ்சாவுடன் கைதான சந்தேக நபரையும் கிளிநொச்சி பொலிஸ் நிலை யத்தில் மேலதிக விசார ணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நட வடிக்கைகளுக்குமாக ஒப் படைத்துள்ளதாக கிளி நொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதி பரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)

# தண்ணீர்முறிப்பு குளத்தின் அபிவிருத்தி வேலை திட்டங்கள் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும்

(கண்டாவளை)

முல்லைத்தீவு தண்ணீர் முறிப்பு குளத்தின் முக்கிய மான சில அபிவிருத்தி வேலைகளை இவ்வாண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு நீர்ப்பாசனத்திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட் டுள்ளது.

முல்லைத்தீவு மாவட் டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான தண் ணீர் முறிப் புக் குளத் தின் கீழான வாய்க்கால்கள் நீர்ப் பாசன வீதிகள் என்பன இதுவரை புனரமைக்கப் படாமல் காணப்படுவதாக வும் இதனைப் புனர மைத்துத் தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக, தண்ணீர் முறிப்புக்குளத்தின் ஆறாம் கண்டம், ஏழாம் கண்டம், ஆகிய பகுதிகளில் இவ்வா றான புனரமைப்பு வேலை கள் மேற்கொள்ள வேண்டி யிருப்பதாக இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த குளத்தின் கீழ் மேற் படி அபிவிருத்தி வேலை களைச் செய்வதற்குரிய நிதி கடந்த காலங்களில் கிடைக் கப்பெறவில்லை. தற்போது மாவட்டச் செயலகம் ஊடாகக் கிடைக்கின்ற நிதியின் மூலம் மேற்படி அபிவிருத்தி வேலைகளை முன் னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களைத் தயாரித்து அனுப்பிவைக்க வுள்ள தாகவும் அதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் அபி விருத்தி வேலைக்களை முன்னெடுக்க முடியும் என நீர்ப்பாசனத்திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (2-315)

## இரு வெவ்வேறு சம்பவங்களில்

# மூன்று சந்தேக நபர்கள் கைது தடயப் பொருட்களும் கைப்பற்று

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 20, மணி நேரத்தில் ஒரு வாள் வெட்டுத் தாக்குதல் சம்பவத்தில் 3பேர் , படுகாய மடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் உட்பட, அனுமதிப் பத்திரத் திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பய ணித்த உழவு இயந்திரங் களின் சாரதிகள் இருவரு மாக மொத்தம் 3, சந்தேக நபர்களைக் கைது செய் துள்ளதுடன் தடயப் பொருட் களையும் கைப்பற்றியுள் ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குண ரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் ஐந்து மணிக்கும் பிற்பகல் ஆறு மணிக்கும் இடையேயான காலப்பகுதி யில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பிரமந்தனாறு கிராமத்தில் இரு தரப்பினருக்கிடையில் நடைபெற்ற வாக்குவாதம் வாள் வீச்சில் முடிந்த நிலையில் மூன்று பேர் படு காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதுடன் சம்பவத் துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப் படையில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு தடயப் பொருட் களும் மீட்கப்பட்டுள்ளது .

இதேவேளை, அன் றைய தினம் பிற்பகல் 5.30, மணியளவில் விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த தருமபுரம் பொலிஸார் புளியம் பொக் கணைப் பகுதியிலும், வட் டக்கச்சி கல்மடு பகுதியிலும் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரங்கள் இரண்டு கைப்பற்றியுள்ள துடன், அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்து ள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ள தடயப்பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலை யத்தில் வைக்கப்பட்டி ருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலை யில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குண ரட்ணா தெரிவித்துள் ளார். (2-15)




# கேப்பாபிலவில் 24 கிணறுகள் படைத்தரப்பினரால் சுத்திகரிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத் தில் கேப்பாப்பிலவில் இரா ணுவத்தினரிடமிருந்து விடு விக்கப்பட்ட காணிகளில் மக்களுக்கான குடிநீரை பெற் றுக் கொள்ளவும் ஏனைய தேவைகளுக்குமாக 24 கிணறுகள் படைத்தரப் பின ரால் நேற்று சுத் திகரிக்கும் பணிகள் முன்னெடு க்கப்பட்டது.

கேப்பாப்பிலவு மக்க ளுக்குச் சொந்தமான காணி களில் படையினர் அப கரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி பொது மக்கள் முன் னிலையில் படைத்தரப்பில் இருந்து முல்லை.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கைய ளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கேப்பாப் பிலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியா மோட்டை பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கையளிக் கப்பட்டன.

குறித்த காணிகளுக்குள் கடந்த முதலாம் திகதி மக்கள் சென்றனர் .இந்நிலையில் தமது அடிப்படை தேவைகள் எதுவும் பூர்த்தி செய்து தரப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டியிருந்த நிலையில் மக்களுக்கான குடிநீரை பெற்றுக்கொள்ள வும் ஏனைய தேவைக்க ளுக்குமாக விடுவிக்கபட்ட காணிகளில் இருந்த சுமார் இருபத்து நான்கு கிணறுகள் படைத்தரப்பால் சுத்திகரிக் கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டு நடை பெற்றது. (2-281)

# கஞ்சாப் பொதியுடன் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா இராசேந்திரன் குளம் பகுதியில் கஞ்சாப் பொதியுடன் நபர் ஒருவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக பொலி சார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா இராசேந் திரன் குளம் பகுதியில் வீதி யால் சென்ற நபர் ஒருவரிடம் சந்தேகத்தின் பேரில் சோதனை மேற்கொண்ட பொலிசார் அவரிடமிருந்து கஞ்சாப் பொதி ஒன்றினை மீட்டுள்ளனர். சூடுவெந்த பிலவு பகுதியைச் சேர்ந்த 52 வயதான நபர் ஒருவரையே பொலிசார் கைது செய்துள் ளதாக தெரிவித்துள்ளனர்.

இவரிடம் எவ்வாறு கஞ் சாப்பொதி கிடைக்கப் பெற் றுள்ளது போன்ற ஏனைய விசாரணைகளை நெளுக் குளம் பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் னர் நேற்று நீதவான் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டார் என நெளுக்குளம் பொலிசார் மேலும் தெரிவித்துள்ள னர். (2-250-281)

# மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதுண்டு இளைஞன் உயிரிழப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வேகக் கட் டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளை ஞன் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, விநாயகபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத் தில் இளைஞன் ஒருவர் ஸ்த லத்திலேயே பலியான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது. இது தொடர்பில் தெரியவரு வதாவது,

மேசன் வேலைக்கு சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வவுனியா, அரபா நகர் பகுதியை சேர்ந்த சஜா (வயது-28) என்ற இளைஞன் பயணித்த மோட்டர் சைக்கிளே வேகக் கட்டுப்பபாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள் ளானதில் குறித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்தார். .இச்சம்பவம் குறித்து விசாரணைகளை நெளுக் குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (2)

# நெடுங்கேணி பொது வைத்தியசாலை வளாகத்தில் பலாமரக்கன்று தோட்டம்





(வவுனியா)

நெடுங்கேணி பொலி சாரின் ஏற்பாட்டில் பொது வைத்தியசாலையில் பலா மரக்கன்றுத் தோட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள் ளது.

நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எஸ். டபிள்யூ. எஸ். சாந்த பண்டாரவின் ஏற்பாட்டில் நெடுங்கேணி பொது வைத் தியசாலை வளாகத்தின் ஒரு ஏக்கர் பலாமரக் கன்றுத் தோட்டத்திற்கு வன்னிப் பிராந் தியத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னங்கோனி னால் வைபவ ரீதியாக பலாக் கன்றை நாட்டி ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதற்கு வவுனியா வட க்குப் பிரதேச செயலாளர் க. பரந்தாமன் வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.டி.என்.பி வெல்கம நெடுங்கேணி இராணுவப் பொறுப்பதிகாரி பாடசாலை அதிபர்கள், வைத்திய அதி காரி, மதகுருமார்கள் ஆகி யோர் கலந்து சிறப்பித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (2)

# 13 வர்த்தக உரிமையாளர்கள் கௌரவிப்பு





(பனிக்கன்குளம்)

வங்காலை கிராமத்திற்கு உட்பட்ட சுமார் 13 வர்த்தக நிலையங்களில் சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களின் விற்பனையை தாமாக கைவிட்ட வர்த்தகர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் வரிசையில் வங்காலை கிராமத்திற்கு உட்பட்ட சுமார் 13 வர்த்தக நிலையங்களில் சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களின் விற்பனையை தாமாக முன்வந்து கைவிட்டுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளதாக வங்காலை பொது சுகாதார பரிசோதகர் வி.ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் வரிசையில் வங்காலை பிரதேசத்திற்கு உட்பட்ட எட்டிற்கும் மேற்பட்ட உணவகங்கள் மற்றும் ஐந்திற்கும் மேற்பட்ட சிறு வியாபார நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் தாமாக முன்வந்து புகையிலை பாவனையை தங்கள் வியாபார நிலையங்களில் முற்றாக கைவிடுவதற்கு தீர்மானித்திருந்தனர்.,

சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களினால் ஏற்படும் புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்நிலைமைகள், இளம் பருவத்தினரிடையே புகையிலைப்பொருட்கள் ஏற்படுத்தும் பாதிப்பு மற்றும் தங்கள் பிரதேசத்தின் எதிர்கால சந்ததி குறித்தான பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி பொதுசுகாதார துறையினரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்,சுக நலக் கல்வி செயற்றிட்டங்களின் வழி பெற்றுக்கொண்ட விழிப்புணர்வு மூலம் தாமாக முன்வந்து இந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் குறித்த பிரதேசத்தில் 13 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் சிகரெட் மற்றும் புகையிலைப்பொருட்களின் விற்பனையை முற்றாக தடை செய்துள்ளனர்.

குறித்தவியாபார நிலையங்களின் உரிமையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நறுவிலிக்குளம் பொது சுகாதார பரிசோதரகர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் சி.வின்சன் மற்றும் மன்னார் மாவட்டத்தின் உணவு மருந்து பரிசோதகர் எஸ்.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளர்களிற்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

எதிர்வரும் காலங்களில் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டு இந்த பிரதேசத்தின் ஏனைய வியாபார நிலையங்களும் இச்செயற்றிட்டத்தில் உள்வாங்கப்படும் எனவும் வங்காலை பொதுசுகாதார பரிசோதகர் வி.ஜெயச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (2-281)

## இரு தினங்களில் வாக்களிக்கத் தவறியவர்கள்
# பெப்ரவரி முதலாம் திகதி வாக்களிக்க முடியும்
## கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 113 நிலையங்களில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது என கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ. அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2018 இற்கான தபால் மூல வாக்களிப்பு இரு தினங்கள் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதில் 17159 பேர் தபால் மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பித்து வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

ஏற்கனவே 12 நிலையங்களில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றுள்ள நிலையங்களில் நேற்று முன்தினம் 101 நிலையங்களில் வாக்க ளிப்பு இடம்பெற்றுள்ளது.

அலுவலக நேரத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும் எனவும் நேற்றைய தினமும் வாக்களிப்பு நடைபெற்றது. இந்த இரு தினங்களிலும் வாக்களிக்கத் தவற விட்டவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி மாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க முடியும் எனவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமலராஜ் தெரிவித்தார்.

நேற்றையதினம் மாவட்ட உதவி தேர்தல் அலுவலகத்தில் இருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் அதிகாலை முதல் பேருந்துமற்றும்ஏனைய வாகனங்களில் மாவட்டத்தில் உள்ள தபால் மூலம் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (2-312)

## ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில்
# புனரமைக்கப்பட்ட வலைஞர்மடப் பாலம் யுத்த நடவடிக்கையினால் பலத்த சேதம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வலைஞர்மடப் பாலம் தற்பொழுது பாரிய சேதங்களுக்குள்ளாகியுள்ளதாக அதனூடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.

1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் புனரமைக்கப்பட்ட குறித்த பாலமானது கடந்தகால யுத்தத்தினால் ஏற்பட்ட எறிகணை வீச்சினால் பெரிதும் சேதமடைந்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் அதிகளவில் பாதிக்கப்பட்டது.

யுத்தத்தின்போது அதிகமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக காணப்படும் வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், இரட்டை வாய்க்கால்,வலைஞர்மடம், புதுமாத்தளன், புதுகுடியிருப்பு உள்ளிட்ட பிரதேசங்கள் யுத்தம் முடிந்து எட்டுவருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் அபிவிருத்தியடையவில்லை என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் 1977 ஆம் ஆண்டு இலங்கையின் உள்ளூராட்சி வீடமைப்பு வேலைத்திட்டத்தினூடாக புனரமைப்பு செய்யப்பட்ட வலைஞர்மடம் பாலம் யுத்தத்தின் காரணமாக பாரிய சேதமாகியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் இந்தப்பாலம் இன்னமும் புனரமைப்பு செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (2-281)

# மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் நிறைவு விழா இன்று

(பனிக்கன்குளம்)

மன்னார் மறை மாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் (1981) நிறைவு விழாத் திருப்பலி இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மன்னார் தோட்ட வெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இன்றைய தினம் காலை 7 மணிக்கு புதிய மன்னார்மறை மாவட்ட ஆயர் இம் மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தோட்ட வெளி ஆலயத்தின் முன்னே உள்ள பிரதான வீதி நுழை வாயிலில் இருந்து பவனியாக வரவேற்று அழைத்து வரப்படுவார்.

மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளைச் சேர்ந்த இறைமக்களும் இந்த மறைமாவட்ட விழாத் திருப்பலியில் கலந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் விளையாட்டு மற்றும் விநோதப் பொருட்களின் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4-281)

# வெளிநாட்டு இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டத்துக்கு இளைஞர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு

(பனிக்கன்குளம்)

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம்ஆண்டுக்கான வெளிநாட்டு இளைஞர் பரிமாற்று வேலை திட்டத்துக்கு இளைஞர்களை தெரிவு செய்யும் நேர்முக தேர்வு நேற்று முன்தினம் மன்னார் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை உதவி பணிப்பாளர் எம்.மஜீத் தலைமையில் இடம்பெற்ற நேர்முகத்தேர்வில்மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பூலோகராஜா , ஆங்கில வள நிலைய அதிகாரி , அமல்ராஜ் தேசிய சம்மேளன பிரதிநிதிகள் ஜோசப் நயன் மற்றும் கலதரன் ஜசோதரன் மேற்பார்வையில் குறித்த நேர்முக தேர்வு இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகங்களையும் சேர்ந்த பல இளைஞர், யுவதிகள் இந் நேர்முக தேர்வில் பங்கேற்றிருந்தனர்.

இந் நேர்முக தேர்வில் தகுதி பெறும் 8 இளைஞர்,யுவதிகள் இவ்வருடம் இடம்பெறும் வெளிநாட்டு இளைஞர் பரிமாற்று வேலைத் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடு செல்ல தகுதி பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

# பாதுகாப்பற்ற கால்வாயில் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற கால்வாயில்கழிவுநீர்தேங்கி துர்நாற்றம் வீசுவதால் மாணவர்கள்,ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதி, கோம்பாவில் வீதி ஆகியவற்றில் உள்ள கழிவு வாய்க்கால்களில் புதுக்குடியிருப்பு நகரத்திலிருந்து வருகின்ற கழிவு நீரும் அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரும் பாடசாலைக்கு அருகில் தினமும் தேங்கிக் காணப்படுவதுடன், கடந்த சில நாட்களாக துர்நாற்றம்வீசுகின்றது.

இதனால் அருகிலுள்ள ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வி கற்று வருகின்ற மாணவர்களும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதுடன், தொற்றுநோய்கள் ஏற்படும் நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் நுளம்புகளின் தொல்லையும் அதிகமாகக் காணப் படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த பாடசாலைக்கு அருகிலுள்ள வடிகான்கள் மிக ஆழமான வடிகான்களாகவும்பாதுகாப்பற்ற வடிகான்களாகவும் காணப்படுவதாகவும் பலரும்ஆபத்தை எதிர்கொள்ளும் நிலை காணப்படுவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும்பலரும்தெரிவித்துள்ளனர். (2-315)

# யாழ்.பல்கலை.வவுனியா வளாக மாணவன் மீது பெருன்பான்மை இன மாணவர் குழு தாக்குதல்

(குருமன்காடு)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீட மாணவன் மீது பெருன்பான்மை இனத்தினை சேர்ந்த மாணவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர் விடுதியில் தங்கியிருந்த முதலாம் ஆண்டு பிரயோக விஞ்ஞான பீட தமிழ் மாணவன் (வயது - 22) தங்கியிருந்த விடுதிக்குஇரவு வந்த இரண்டாம் ஆண்டு பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன மாணவர்கள் தாக்குதல் மேற்கொண்டு விட்டு சென்றுள்ளனர்.

இதன்போது காயமடைந்த முதலாம் ஆண்டு பிரயோக விஞ்ஞான பிரிவு மாணவனை அவரது சக நண்பர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டனர். இதன்போது நீங்கள் விடுதலைப்புலிகள், ஆகையால் இராணுவத்தினரின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பணித்துள்ளனர். இதன் போது பெருன்பான்மை இன மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விடுதி காப்பாளர் சென்ற நிலையில் பெருன்பான்மை இனத்தினை சேர்ந்த மாணவர்கள் கலைந்து சென்றுள்ளனர். அதன் பின்னர் பிரஸ்தாப நபரை அவரது நண்பர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த பல்கலைக்கழக மாணவனுக்கு நெஞ்சு, வாய் பகுதிகளில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். வவுனியா வைத்திய சாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 142

## சித்தமருத்துவ ஆய்வு மாநாடு இம்முறை உலகளவில்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வு மாநாடு இம்முறை உலகளாவிய ரீதியில் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கின்றது.

கடந்த வருடம் தேசிய ரீதியிலான மாநாடாக உருவாக்கம் பெற்ற இவ்வாய்வு மாநாடு இம்முறை முதன் முறையாக உலகளாவிய ரீதியிலான சித்த மருத்துவ ஆய்வு மாநாடாக பரிணமிக்க இருக்கின்ற தென் இந்த கண்காட்சியையும் ஆய்வு மாநாட்டையும் கருதலாம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு கடந்த வருடம் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் துறையுடனிணைந்து நடத்திய சித்த மருத்துவமும் ஆய்வு மாநாடும் கண்காட்சியும் அனைவரதும் பாராட்டைப் பெற்றதுடன் பலரும் இவ்வாறான ஆய்வு மாநாட்டை நடத்தியமையை புகழ்ந்து கூறவும் தவறவில்லை.

தென் பகுதி சுதேச வைத்திய நிறுவன தலைவர்களும் சென்ற ஆண்டு ஆய்வு மாநாட்டை முழுவதுமாக பார்த்து கிரகித்து வியந்து சென்றதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இம்முறை இவ்வளவு சிறப்புக்களுடன் சேர்த்து இந்தியாவின் ஆயுஷ் அமைச்சுடனிணைந்து சித்த மருத்துவ அலகும் வடக்கு மாகாண சுதேச மருத்துவத்திணைக்களம் நடத்தவிருக்கும் இந்த உலகளாவிய ஆய்வு மாநாடு, இன்னும் விசேட மானதாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

முழுக்க முழுக்க சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களின் பங்களிப்பு தமக்குரிய அடையாளத்தை அங்கு பணி புரியும் விரிவுரையாளர்களும் மாணவர்களும் ஏனைய பணியாளர்களும் இவ்வாறான கண்காட்சி மற்றும் ஆய்வு மாநாட்டின் மூலமாக வெளிக்கொணர்வது அனைவரையும் பிரமிக்க வைத்திருக்கின்றது. இம்முறை ஆய்வு மாநாடு உலகளவில் இந்தியாவின் ஆயுஷ் அமைச்சினையும் இணைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறையுடன் வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை வைத்தியர்கள் என பலரும் இணைந்து நடத்தும் இவ் ஆய்வு மாநாடு பல புதிய எமது தேக ஆரோக்கியத்திற்கு தேவையான உணவு, மருந்து, பயிற்சி என பலவற்றை உள்வாங்கி நடத்தப்படவிருப்பது மகிழ்வுக்குரியதுடன் பலரும் பயன்படக் கூடியதாக இருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 158




பதனை தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகின்றோம்.

எமது பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத்தின் தொன்மையை பறைசாற்றும் வகையில் கண்காட்சியுடனிணைந்த ஆய்வு மாநாடு முன்னெடுக்கப்படுவது சித்த மருத்துவத்தின் பால் எம்மவர்களை ஈர்த்தெடுக்கும் என நாமனைவரும் கருதலாம்.

எமது கலை, கலாச்சாரம், பண்பாடு என்னும் வாழ்வியலை பாரம்பரிய மருத்துவத்துடன் எடுத்துக்கூறும் பலவிதமான விடயங்களை இந்த கண்காட்சியினூடாக நாம் தரிசிக்கலாம்.

எம்மவர்களால் எமது பல்கலைக் கழகத்தில் இந்த மாநாட்டுக்கு பல சிறப்பம்சங்கள் உண்டு. முதலாவது ஒரு நிறுவனமாக பரிணமிக்க விருக்கும் சித்த மருத்துவ அலகு தங்களின் ஆளுமையினை வெளிப் படுத்தும் காட்சியாக மாநாட்டை முழுவதுமாக பார்த்து கிரகித்து வியந்து சென்றதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சித்த மருத்துவத்தின் தொன்மையுடன் பாரம்பரிய வைத்தியர்களினை உள்வாங்கி ஆய்வு மாநாடு நடைபெற்றது சிறப்புக்குரிய அம்சமாக பாராட்டப்பட்டதுடன் கலந்து கொண்ட பாரம்பரிய வைத்தியர்கள் தமக்கு அளித்த அங்கீகாரத்திற்கு மனதார நன்றியும் தெரிவித்திருந்தனர்.

பலஆண்டுகளாக சித்த மருத்துவத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஓர் அலகாகவே செயற்பட்டு வருகின்றது.

பரிணமிக்கவிருப்பது சித்த வைத்திய அலகில் ஓர் மைல்கல்லாகவே பதிவு செய்யவேண்டும்.

சித்தமருத்துவ அலகின் முக்கியத்துவத்தை பலவழிகளில் முன்னெடுத்து செல்ல வேண்டியது எமது எல்லோரினதும் முக்கிய பொறுப்பாகும்.

இவ்வலகில் மருந்து உற்பத்தி மற்றும் தாதிய பயிற்சிக்கான கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகள் நடைபெற்று வரும் இவ்வேளையில் உயர் பட்டடிப்ளோமா கற்கையையும் வழங்க ஆவன செய்யப்படுகின்றது.

எமது பாரம்பரிய மருத்துவர்களையும் மருத்துவத்தையும் நாம் பேணிக் காப்பாற்ற வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

இதற்காக சித்த மருத்துவத் துறை தனிப்பிரிவினை உருவாக்கி அவர்களது அனுபவங்களையும் மருந்துகளையும் பிரசன்னம் செய்ய ஒழுங்கு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்த உலகளாவிய மாநாடு பலவிதமாக அனுபவங்களையும் அனைவருக்கும் வழங்க நாமும் பாராட்டுவதுடன் அதில் கலந்து கொண்டு பயன்பெறவும் முடியும்.

விபரங்களுக்கு http:// www.siddha.j fn.ac.lk என்னும் இணையத் தளத்தினை அணுகலாம். வாருங்கள் வந்து பயன் பெறுங்கள்.

# மதுவிவகாரம்;மங்களவுக்கு எதிராக 13 மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

மதுபான நிலையங்களில் பெண்களும் பணிபுரியலாம் என்பது தொடர்பில் வெளியான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்தமைக்கு எதிராக, இதுவரையிலும் 13 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தங்களுடைய அடிப்படை உரிமையை மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே, நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சர் மங்கள சமரவீரவினால் 2018.01.10 அன்று வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல், ஜனாதிபதியின் அழுத்தத்தின் பிரகாரம் மீண்டும் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டமை, தங்களுடைய அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என்றும் அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பிரதிவாதிகளாக, அமைச்சர் மங்கள சமரவீர, கலால் திணைக்கள ஆணையாளர், சட்டமா அதிபர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 6 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மதுபானங்களை, பெண்கள் கொள்வனவு செய்யும் உரிமையைத் தடுப்பதன் மூலம் அரசமைப்பில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை மீறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின்படி தமக்கு விருப்பமான தொழிலைச் செய்வதற்கான பிரஜைகளின் சுதந்திரம், இந்த வர்த்தமானியை இரத்து செய்ததன் ஊடாக, பெண் என்பதால் தமக்கு இல்லாமல் போயுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒரே கட்சி எம்.பிக்களை சாடும் வகையில் கருத்து வெளியிடுவது ஆரோக்கியமானதல்ல

## சிறிதரன் எம்.பி.விசனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைச் சாடும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது ஆரோக்கியமானதல்ல என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். எல்லாவற்றுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றில்லை, மாகாண சபை உறுப்பினர்களும் தம்மால் முடிந்தவற்றை மக்களுக்கு செய்ய முன்வரல் வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவரது வாசல் தலத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது, வடக்கு மாகாண சபையின் நேற்று முன்தின அமர்வில், முல்லைத்தீவில் சிங்கள மயமாக்கல் மிக தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள், 30 மாகாண சபை உறுப்பினர்கள் இருந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை என ஆளுங்கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் சாடியிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சிங்கள மக்களுக்கு வடக்கில் காணி வழங்கப்பட வேண்டும் என்பதில் எமக்கு எந்த வித உடன்பாடும் கிடையாது. முல்லைத்தீவில், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு ஆகிய இடங்களில் தமிழ் மக்களை படுகொலை செய்து, அங்கிருந்து விரட்டி விட்டு, மேற்படி பூர்வீக இடங்களில் சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன.

பதவியாவிலிருந்து மெல்ல மெல்ல சிங்களவர்களை தமிழ் மக்களுடைய காணிகளை நோக்கி நகர்த்திக் கொண்டுவருகின்றனர். அதிகாரத்துடன் கூடிய ஒரு தீர்வு எமக்கு கிடைத்து விட்டால் சிங்களமயமாக்கலை இலகுவில் தடுத்துவிட முடியும். ஆகவே ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டாது தம்மால் இயன்றவற்றை செய்வதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் முன்வரல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

கண்களில் நித்தம் ஈரம் -,ஒவ்வொரு
கணப்பொழுதுகளிலும் உங்களின் சோகம்!!!
ஓராண்டு காலம் உருண்டோடி விட்டது.
உங்கள் நினைவோ, மனதை நெருடுது!!!

காலனும் தன் கைகளைநீட்டிட
காரிருள் வழியே நீங்கள் நடந்தீர்களே!!!
நீங்கள் விண்ணில் கலந்திட்ட நாள் முதல்
எம் விழிகள் உறங்க மறுக்கிறது ஐயோ!!!

இல்லறம் எனும் நல்லறம் கண்டு
செல்வங்களாய் நால்வரைப் பெற்றீர்
கண்ணுக்குள் மணியாய்
இமைபோலக் காத்தீர்!!!


பெற்ற செல்வங்களுக்கு கல்வி எனும் பெரும்பேற்றுடன்,
அன்பு,கருணை, பண்பு என அனைத்தையும்
கற்றுத் தந்து, எமைப்பேணி வளர்த்தீர்களே!
எமதருமைப் பெற்றோரே!!!

கூடிக்கழித்த நாட்களதனை கடிகார முட்களை
பின் திருகிப்பார்க்கின்றோம் கண்ணீராய் நெஞ்சமதில்
குத்துகிறதே உங்கள் நினைவு

பெற்றோரின் பாசம் நித்தம் நித்தம் வேண்டும்
வந்து விடுங்கள் மீண்டும் வந்து விடுங்கள்
வாஞ்சையுடன் காத்திருக்கின்றோம்,

ஓராண்டு போனதை நம்பவில்லை எம் மனது,
மனதிலும் மீளவில்லை உம் அன்பான நினைவுகள்
படைத்தவன் அன்பு கொண்டு அழைத்திட்டான்
பதைபதைக்கின்றோம் நாம் துடுப்பிழந்த படகுகளாய்!

எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எமதருமைப் பெற்றோரே;
உங்கள் ஆத்மா ஆண்டவன் அடியில் சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!




அமரர் திருவாளர்
**சின்னையா சுந்தரலிங்கம்**

அமரர் திருமதி
**சுந்தரலிங்கம் நாகரத்தினம்**

எங்கள் பெற்றோர்களின் ஓராண்டு நினைவு நிகழ்வு சாந்தை பண்டத்தரிப்பில் உள்ள இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரது ஆன்ம ஈடேற்ற பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நீங்கா உங்கள் நினைவலைகளுடன் ஏங்கி
தவிக்கும் ஆருயிர் பிள்ளைகள், அன்பு மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

சாந்தை,
பண்டத்தரிப்பு.

(2556)

## இராசிபலன்

**மீனம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்:** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திட்டமிட்ட காரியத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**மிதுனம்:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்:** மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, வாகன சுகமுண்டு, சுப செலவுகள் கூடும் நாள், .நண்பர்கள் சந்திப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | இராசிபலன் கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம் | | ராகு |
| சூரி.சுக் கேது புத | | | |
| சனி | செவ் | குரு | |

**27.01.2018**

தை 14, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 06.36 மணிக்கு
தசமி காலை 7.27 மணிவரை
ஏகாதசி பின்னிரவு 5.17 மணிவரை
ரோகினி பின்னிரவு 1.04 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை

வளவன்

**கடகம்:** அதிர்ஷ்டவாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**மகரம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**சிம்மம்:** சிறப்பான நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை மொத்தமாக சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், தடைகள் உடைபடும் நாள்.

**விருச்சிகம்:** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், தொழில் முன்னேற்றத்திற்காக புதிய நண்பர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும்.


**துலாம்:** மனதில் கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. ரோக பயமுண்டு.

**கன்னி:** தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் மாறும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், ரோக பயமுண்டு.

# பாரதம்








இந்தியாவின் 69ஆவது குடியரசுதினம் நேற்று நாடுமுழுவதும் கொண்டாடப்பட்ட நிலையில் டில்லியில் மூவர்ண தேசியக்கொடியை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஏற்றிவைத்தார்.

# இந்தியாவில் ஆசியான் நாட்டு தலைவர்கள் பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை



(டில்லி)

இந்தியா வந்துள்ள ஆசியான் நாட்டு தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

கடல் பிராந்திய பாதுகாப்பில் ஒத்துழைப்பதற்கான புதிய நெறிமுறையை உருவாக்க தலைவர்கள் முடிவு செய்தனர்.

இந்திய குடியரசு தினம் நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி டில்லியில் சிறப்பு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த விழாவில் ஆசியான் கூட்டமைப்பைச் சேர்ந்த 10 நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றுள்ளனர்.

மேலும் ஆசியான் அமைப்பில் இந்தியா இணைந்ததன் 25ஆம் ஆண்டு நினைவை போற்றும் வகையில் நடைபெறும் சிறப்பு மாநா ட்டிலும் அவர்கள் பங்கேற் றனர். இதற்காக இந்தோனேஷியா, சிங்கப்பூர், வியட் நாம், மலேசியா, தாய்லாந்து, மியன்மார், பிலிப்பைன்ஸ், புரூனே, லாவோஸ்மற்றும்கம்போடியா நாட்டு தலைவர்கள் இந்தியா வந்தனர்.

டில்லி வந்திருக்கும் இந்த தலைவர்களுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். அந்த வகையில் மியன்மார் தலைவர் ஆங் சான் சூகி, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ துதர்தே மற்றும் வியட்நாம் பிரதமர் ஜுவான் பக் ஆகியோருடன் தனித்தனியே பேச்சுவார்த்தை நடந்தது.

அந்தந்த நாடுகளுடன் இருதரப்பு உறவு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக இந்த பேச்சுவார்த்தை அமைந்தன. மேலும் இந்தியாவின் கிழக்கு சார்ந்த கொள்கைக்கு வலுச்சேர்க்கும் வகையிலான விவகாரங்களும் அதில் இடம்பெற்றிருந்தன.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இந்தியா மற்றும் ஆசியான் நாட்டு தலைவர்கள் கூட்டாக பங்கேற்ற சிறப்பு அமர்வு ஒன்று நடந்தது. இதில் இந்தியா மற்றும் ஆசியான் நாடுகள் கடல் பாதுகாப்பில் சந்திக்கும் சவால்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. முடிவில் கடல் பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக புதிய வழிமுறை ஒன்றை உருவாக்க தலைவர்கள் ஒப்புக் கொண்டனர்.


தென் சீனக்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் காரணமாக சீனாவுக்கும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குமிடையே மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில் இந்த முடிவு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த பிரச்சினையில் சீனாவுக்கும், ஆசியான் கூட்டமைப்பிலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து சர்ச்சை நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை தனியே சந்தித்து, பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான கலாசாரம், பொருளாதாரம் மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் நிதி தொழில்நுட்பம், சுற்றுலா, ஸ்மார்ட் நகரங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் ஆக்கப்பூர்வ விவாதங்களை மேற்கொண்டனர். ஆசியான் கூட்டமைப்பில் இந்தியாவின் 2ஆவது மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக சிங்கப்பூர் விளங்கி வருகிறது.

பின்னர் தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓச்சாவை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். அப்போது தாய்லாந்தின் மேற்கு சார்ந்த கொள்கைக்கு, இந்தியாவின் கிழக்கு சார்ந்த நடவடிக்கைகள் எப்போதும் ஒத்துழைக்கும் என்று உறுதி அளித்ததாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ் குமார் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்தார். (இ-10)

# வைத்...
# ஐம்ப...



# கண்ணி...
# 26 பேர்...

(பமாகோ)

மாலி நாட்டில் வாகனத்தில் சென்றபோது கண்ணி வெடியில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 26

# வடகொரியாவின் ...
# இராணுவ நடவடிக்...

## தென்கொரிய வெளிவிவகார...



(சியோல்)

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதப் பிரச்சினையை, இராணுவ நடவடிக்கை மூலமாக தீர்க்க முடியாதென, தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் Kang Kyung wha தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றுவரும் உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற தென்கொரிய வெளிவிவகார அமைச்சர், வடகொரியா விவகாரம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கருத்துத் தெரிவித்தபோதே, மேற்கண்டவாறு தெரி

# வெளிநாடு

# ந்தியசாலையில் பயங்கரத்தீ து பேர் பரிதாபமாகப் பலி !




## தென்கொரியாவில் பெரும் சோகம்

**(சியோல்)**

**தென்கொரியாவின் மிர்யாங் நகரிலுள்ள வைத்தியசாலையில் நேற்றுக்காலை ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் உட்பட 50 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**

தென்கொரியாவின் மிர்யாங் நகரிலுள்ள சேஜாங் வைத்தியசாலையில் நேற்றுக்காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதய நோய் சிகிச்சை அறையில் இருந்து பற்றிய தீயானது வைத்தியசாலையின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது.

விபத்து ஏற்பட்ட போது அங்கு 200 பேர் வரை இருந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை இந்த விபத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையில் இன்னும் பலர் சிக்கியுள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.



மீட்புப்பணிகள் தீவிரமாக நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## வெடியில் சிக்கி ர் உயிரிழப்பு

பர்கினா பசோ பகுதியில் இருந்து சந்தையில் பொருட்கள் வாங்க ஏராளமான மக்கள் ஒருவாகனத்தில் சென்றனர்.

சுரங்கத்தில்சென்றுகொண்டிருந்த வாகனம் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியது.

இந்த விபத்தில் அதில் பயணம் செய்த அப்பாவி பொதுமக்கள் 13 பேர் சம்பவ இடத்திலேயே பலியானதாக முதல் கட்ட தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், கண்ணி வெடியில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது என மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக மீட்பு படையினர் கூறுகையில், நேற்றுக்காலை சந்தைக்கு சென்ற வாகனம் கண்ணி வெடியில் சிக்கி கொண்டதில் அதில் பயணம் செய்த 4 குழந்தைகள் உள்பட 26 பேர் உடல் சிதறி பலியாகினர். மேலும்பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளோம் என தெரிவித்துள்ளனர். (இ-10)

ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு நாடு மாலி. மாலி நாட்டின் மத்திய பகுதியில் உள்ள

## ன் நெருக்கடிக்கு டிக்கை தீர்வாகாது

### கார அமைச்சர் தெரிவிப்பு




வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 'வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதப் பிரச்சினையை இராணுவ நடவடிக்கை மூலம் கையாள முடியாதென்பதுடன், அப்பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் அணுக வேண்டும்.

எனவே, 'வடகொரியாவின் அணுவாயுதப் பிரச்சினையைக் கையாள விரும்பும் அமெரிக்கா, இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்தாலும், எம்முடன் நெருக்கமாகவிருந்து கலந்தாலோசிக்கும்' எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## 1500 தொழிலாளர்கள் உழைப்பில்

# புதிய புகையிரத நிலையத்தை ஒரே இரவில் அமைத்த சீனா






(பீஜிங்)

சீனாவின் ஃபுஜியான் மாகாணத்திலுள்ள முக்கிய புகையிரத தடத்தில் 1500 தொழிலாளர்களைக் கொண்டு ஒரே இரவில் புதிய புகையிரத நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தெளிவான திட்டம், அசாத்திய வேகம் ஆகியவற்றால் சீனா எந்த சவால்களையும் முறியடித்து விடுகிறது. அவர்களின் உழைப்புக்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ திட்டங்களை கூறினாலும், ஒரே இரவில் ஒரு புகையிரத நிலையத்தையே முழுவதுமாக கட்டமைத்துள்ளது.

ஃபுஜியான் மாகாணத்திலுள்ள லோங்யான் நகரில் தான் இந்த புகையிரத நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. முக்கிய நகரங்களை இணைக்கும்வழித்தடத்தில்புதிதாக புகையிரத நிலையம் அமைக்க தேவைப்பட்டதால், கடந்த 19ஆம் திகதி இரவில் பணிகள் தொடங்கப்பட்டு மறுநாள் காலை முடிக்கப்பட்டுள்ளன. 9 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் பணிகள் முடிக்கப்பட்டன.

1500 தொழிலாளர்கள் 7 குழுக்களாக பிரிந்து தங்களுக்கு வழங்கப்பட்ட பணியை சிறப்பாக செய்துள்ளதாக சீனா டைஸிஜ° கட்டுமான நிறுவனத்தில் துணை மேலாளர் ஷான் தாவ்சாங் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த வழித் தடத்தில் புகையிரதங்கள் இயக்கப்படும் என அந்நாட்டு ரயில்வேதுறை தெரிவித்துள்ளது. (இ-10)

# குற்றவியல் சட்டத்தின் கீழ் கோத்தா தவறிழைப்பு

## சட்டமா அதிபர் நீதிமன்றில் தகவல்



**(கொழும்பு)—**

**வீரகெட்டியவில் டி.ஏ.ராஜபக்ஷ நினைவிடம் 90 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டதன் மூலம், பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம் ஆகிய வற்றின் கீழ், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேர் தவறிழைத்துள்ளனர் என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த விசாரணையின் போதே, இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டது.

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் இது தொடர்பான விரிவான அறிக்கையை தாக்கல் செய்தனர். நினைவிடத்தை அமைப்பதற்கு இலங்கைக் கடற்படையினரைப் பயன் படுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, கோத்தபாய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் நீடிப்புச் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜப்பானுக்கு அதிக முதலீட்டு வாய்ப்புகளை வழங்கத் தயார்

(கொழும்பு)

இன்னும் அதிகமான முதலீட்டு வாய்ப்புகளை ஜப்பானுக்கு வழங்க இலங்கை தயாராக இருக்கிறது என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள, ஜப்பானின் முன்னணி கைத்தொழில், வர்த்தக நிறுவனங்களின் 77 பிரதிநிதிகளைக் கொண்ட குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

1979 ஆம் ஆண்டு ஜப்பானின் மிகப் பெரிய வர்த்தகக் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர், 39 ஆண்டுகள் கழித்து, ஜப்பானில் இருந்து மிகப் பெரிய வர்த்தகப் பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளது.



இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியுள்ள கலாநிதி அகியோ மிமுரா, சந்திப்பின் போது கருத்து வெளியிடுகையில், கைத்தொழில், உட்கட்டமைப்பு, உருக்கு, மென்பொருள், போக்குவரத்து, விமான சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை ஜப்பானிய அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பல முன்மொழிவுகளையும் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கியுள்ளார். (இ-7)

# முதலமைச்சர் முன் முழந்தாளிட்ட அதிபர் 7 மணி நேரம் சாட்சியம்

(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சமிந்த தசநாயக்கவினால், முழந்தாளிட்டு மன்னிப்புக் கோர வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பதுளை பெண்கள் பாடசாலை அதிபர் ஆர். பவானி ஏழு மணி நேரம் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பதுளை பெண்கள் பாடசாலை அதிபர் பவானி நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது அவர் சுமார் 7 மணிநேரம் சாட்சியம் அளித்துள்ளார்.

அதேவேளை, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலர் சந்தியா அம்பன்வல உள்ளிட்ட 6 அதிகாரிகளுக்கு மனித உரிமை ஆணைக் குழு அழைப்பாணை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் முக்கிய அதிகாரிகள் இருவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் மேலதிக செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வாகனங்கள் கொள்வனவின் போது இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் ஊழல் மோசடி குற்றச்சாட்டில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நம்மைக் குறை சொல்வானேன்

அந்தாளுக்கு அழைப்பு அனுப்புறது வேஸ்டுங்க. ஏற்கனவே அனுப்பின-அழைப்புக்கே அந்த மனுஷன் வரலைங்க. தயவு செஞ்சு அனுப்பாதீங்க என்று மனைவி உபதேசிக்க கணவன் பூம்பூம் மாடானார்.

அவ்வளவாக நெருக்கமற்ற நட்பு, சற்றே பிரச்சினையாகிப்போன உறவு போன்ற சூழ்நிலைகளில் பலர் இப்படிப்பட்ட முடிவுக்குத் தான் வருகிறார்கள்.

நல்லது கெட்டதுக்கு எல்லோரும் வர வேண்டும் என்கின்ற எண்ணம் ஒருவருக்கு மிக அவசியம்.

அவர்கள் வருகின்றார்களோ வரவில்லையோ அவர்களுக்கு விபரமாவது தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது அதைவிட அவசியம்.

கூட்டம் வேண்டாம் கும்பல் சேர்க்க வேண்டாம் என்று எண்ணினால் கடைசி நிமிடம் அழைப்புக் கிடைக்கும்படியேனும் அனுப்பலாம். தவறில்லை. அனுப்பாமலே விட்டு விடுவது தான் தவறு.

ஒருவர் கஷ்டப்பட்டுத் திணறித் திணறி வீடு கட்டினார். பணக்கஷ்டம் அதிகமானதால் கிரகப் பிரவேசத்தை விரிவாக நடத்த முடியாத நிலை குறிப்பிட்ட சிலரை மட்டும் அழைத்து கிரகப் பிரவேசத்தை நடத்தினார். பிரச்சினை வெடித்தது. ஏராளமான பேரின் பகைக்கு ஆளானார். இப்போது வருத்தப்படுகின்றார் வீடு கட்டி ஏகப்பட்ட பேரை விரோதித்துக் கொண்டேனே என்று.

குடும்ப உறுப்பினர்களை மட்டும் வைத்துக் கிருகப் பிரவேசம் செய்துவிட்டு எலலோருக்கும் கடிதம் போட்டு சௌகரியப்படும் போது எங்கள் புது இல்லத்திற்கு வாருங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட குற்றச்சாட்டிலிருந்து தப்பித்திருக்கலாம். குறிப்பிட்ட சிலரை அழைப்பதா? வேண்டாமா? என்கிற பிரச்சினை வருகிற போது அதை நளினமாகக் கையாள வேண்டும்.

பலவீனப்பட்டுப் போயிருக்கின்ற உறவைப் பலப்படுத்தவும் நீங்கள் மாறிவிட்டாலும் நான் எப்போதும் போல் இருக்கிறேன் என்பதை நிலைநாட்டவும், உங்களைவிட எனக்குப் பெருந்தன்மை இருக்கிறது என்கிற உணர்வை உலகிற்குத் தெரியப்படுத்தவும் நாம் அழைப்பு அனுப்பத்தான் வேண்டும். அவர்கள் அனுப்பவில்லை என்று நம்மைக் குறை சொல்ல இடந்தராமல் அவர் அனுப்பினார். நான் தான் போக வில்லை என்கிற வாக்கு மூலத்தை வெளிப் படுத்தச் செய்ய வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வீட்டில் நல்ல விசேடம் நடக்கிற போது மற்றவர்கள் வரமுடியாத சூழ்நிலையில் வாழ்த்தவும் ஒரு வீட்டில் துக்கமான சம்பவம் நடந்துவிட்ட போது அதில் கலந்து கெள்ள முடியாமல் போனாலும் நடந்த சம்பவத்திற்காக வருத்தப்படவும் வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் அழைப்பு அனுப்பினாலோ தகவலைத் தெரியப்படுத் தினாலோ இது நடக்கும்.

இதைச் செய்யாத போது ஒரு மங்களகரமான காரியம் நடக்கும்போது அது உருப்படாமல் போகட்டும் என்றும் மரணம் சம்பவித்துவிட்டால் நல்லா வேணும் என்று அழைப்பு மற்றும் தகவல் கிடைக்காதவர்கள் சபிப்பார்கள். இது ஒருவருக்கு வெற்றியாகுமா?

**லேனா தமிழ்வாணன்**


# தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளுக்கு கூட்டமைப்பு துரோகம்

## சட்டத்தரணி சுகாஸ் பகிரங்க குற்றச்சாட்டு

## “30 கோடிக்காக தமிழினத்தை விலைபேசி விட்டார்கள்”

(யாழ்ப்பாணம்)

**கண்களை இழந்து, கால்களை இழந்து தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துரோகம் இழைத்துக் கொண்டிருக்கின்றது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான சுகாஸ் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.**



அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் கரவெட்டியில் இடம் பெற்றது. இங்கு உரையாற்றிய சுகாஸ் மேலும் தெரிவிக்கையில்,

“எங்கள் தலைவன் பிறந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த இந்த வடமராட்சி மண்ணிலே, எங்கள் அண்ணன் கஜேந்திரகுமார் பிறந்த இந்த மண்ணிலே தமிழ்த் தலைமைகள் என்ற போர்வையில் சிலர் உலாவிக்கொண்டிருக்கிறனர். இவர்களை எப்பொழுது நாங்கள் இந்த மண்ணிலிருந்து அகற்றப்போகின்றோம். இதுதான் என் முன்னே எழுகின்ற கேள்வி. இந்தக் கேள்விக்கான பதிலை இந்த மண்ணும் மக்களும் விரைவிலே அளிக்க வேண்டும்.

ஏனென்றால் இன்று இவர்கள் தமிழனத்தை விலை பேசி விட்டார்கள். ஒட்டுமொத்த தமிழினத்தையும் முப்பது கோடிக்கு ஆசைப்பட்டு இவர்கள் விலைபேசி விட்டார்கள்.

இது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என நான் நினைக்கின்றேன். கடந்த வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது ஆரம்பத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்த்து வாக்களிப்பதாக இருந்தனர்.

வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பின் முதல்நாள் இரவு வரை அதனை எதிர்த்து வாக்களிப்பதாகவே திட்டம் இருந்தது. ஆனால் வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பிற்கு முன்பாக முற்பகல் 10 மணியளவில் ரணில் விக்கிரமசிங்கவோடு ஒரு மந்திராலோசனை நடந்தது. அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இரண்டு கோடி பரிமாறப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்க இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒன்றுமே இல்லாத வரவு-செலவுத் திட்டத்தை வெறும் இரண்டு கோடிக்கு ஆசைப்பட்டு ஆதரித்து வாக்களித்தனர்.

நான் உங்களிடம் கேட்கின்ற கேள்வி இரண்டு கோடிக்கு ஆசைப்பட்டு வரவு-செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்த இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூத்தாடிகள் இன்னும் ஒரு 10 கோடிக்கு ஆசைப்பட்டு எமது இனத்தை காட்டிக்கொடுத்து விற்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

வர இருக்கின்ற தீர்வுத்திட்டத்தில் ஆளுக்கு 10 கோடியை வாங்கிகொண்டு தமிழினத்தை காட்டிக்கொடுக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

இதற்காகவா? எங்கள் தலைவர் போராடினார். இதற்காகவா? 20 ஆயிரம் மாவீரர்கள் தங்கள் உயிர்களை விட்டார்கள். கண்களை இழந்து, கால்களை இழந்து தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளுக்கு துரோகம் இழைத்துக் கொண்டிருக்கின்றது இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இனியும் இவர்களை விட்டு வைத்தால் போலி வாக்குறுதிகளுக்காக அவர்கள் எங்கள் இனத்தை விற்று அமைச்சுப் பதவிகளை ஏற்று சுகபோக வாழ்க்கையை அனுபவிப்பார்கள். இது நிச்சயம் நடக்கும்.

இவ்வாறான வரலாற்றுத் துரோகிகளை நாம் ஆதரித்து வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்கப்போகின்றோமா? அல்லது கொள்கைக்காக பதவியையே தூக்கி எறிந்துவிட்டு வந்த அண்ணன் கஜேந்திரகுமார் தலைமையை ஆதரித்து சைக்கிள் சின்னத்துக்கு வாக்களித்து எமது கொள்கை வழியான அரசியலை பலப்படுத்தப்போகின்றோமா? என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

---

### உள்ளூராட்சி தேர்தல் ஊடாக

# மூன்றாவது தடவையாகவும் மகிந்தவை தோற்கடிப்போம்

## ஐ.தே.க.அமைச்சர் காரியவசம் உறுதி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஆரம்பித்தார். எனினும் தற்போது அவர் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் சுமத்தி வருகின்றனர்.

இதன்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக மூன்றாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து அவருக்கு பதிலளிப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறிமோசடி தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு அமைப்பதற்கு ஜனாதிபதிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்கினார்.

இதன்பிரகாரமே அவர் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி மோசடி தொடர்பில் குற்றச்சாட்டு எழுந்த போது அதனை உரிய முறையில் விசாரணை செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிட்டிபன தலைமையிலான குழு வொன்றை அமைத்தார். அந்த குழுவின் அறிக்கையை அடிப்படையாக கொண்டு பாராளுமன்றத்தில் விவாதமொன்றையும் பெற்றுக் கொடுத்தார்.

அதன்பின்னர் பொதுத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் தனக்கு சாதகமான ஒருவரை நியமிக்காமல் கோப் குழுவிற்கு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியை தலைவராக நியமித்து இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஒழுங்கு முறையுடன்நடந்துகொண்டார்.

கோப் குழுவின் அறக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் அதனை உடன்டியாக சட்டமா அதிபருக்கு அனுப்பி மோசடிக்காரர்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கவும் பிரதமர் முன்னின்று செயற்பட்டார்.

இந்த மோசடி தொடர்பில் எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கை குறித்தும் தண்டனை குறித்தும் பிரதமர் கேட்டறிந்தார்.

அதன்பின்னர் குறித்த மோசடி தொடர்பாக மேலும் விசாரணை செய்வதற்கு வழங்கி ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவிற்கு பூரண ஒத்துழைப்புகளையும் வழங்கினார். இதன்பிரகாரமே குறித்து ஆணைக்குழு முன் சென்று சாட்சியமளித்தார். இதன் ஊடாக தான் ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் கூடிய அரசியல்வாதி என்பதனை மீண்டும் நாட்டுக்கு நிரூபித்தார்.



தற்போது ஒரு சில அரசியல்வாதிகள் இந்த மோசடியை மையமாக வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது அதுவே அவர்களுக்கு பாரமாகியுள்ளது. இந்த மோசடியை அடிப்படையாக கொண்டு மக்களின் கவனத்தை கூட்டு எதிர்க்கட்சியினர் திசைத்திருப்பபார்கின்றனர். இதன்படி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மூன்றாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து அவருக்கு பதிலளிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

### வேண்டுதலுக்காக உடைத்ததால்

# தேங்காய் தட்டுப்பாட்டுக்கு மகிந்த குழுவே காரணம்

## அமைச்சர் ஹரிசன் புகார்



(கொழும்பு)

நாட்டில் தேங்காய் பற்றாக்குறை ஏற்படுவதற்கு பிரதான காரணம் மகிந்த ராஜபக்ஷவுடன் உள்ள குழுவே ஆகும் என அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ குழுவினர் மக்களிடம் தேங்காயின் விலை அதிகமாகவுள்ளதாக கூறி அரசாங்கத்துக்கு எதிரான சிந்தனையை வளர்க்கின்றனர்.

கடந்த காலத்தில் மதஸ்தானங்கள் அனைத்துக்கும் சென்று ஒவ்வொரு மகிந்த குழு உறுப்பினரும் அதிகமான தேங்காய்களை வேண்டுதலுக்காக உடைக்கப் போய்த்தான் நாட்டில் தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இன்று இதனை இவர்கள் அரசாங்கத்தின் மீது போடுகின்றார்கள் எனவும் அமைச்சர் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக ஜனாதிபதியால் தண்டனை விதிக்க முடியாது

## கூட்டு எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டணி அமைத்துக் கொண்டுள்ள ஜனாதிபதியால் தண்டனை வழங்க முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்த தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் அழுத்தம் காரணமாகவே பிணைமுறி மோசடி தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட முடியவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிமொழி வழங்கிய போதிலும் நடைமுறையில் இந்த வாக்குறுதிகளை ஜனாதிபதியால் நிறைவேற்ற முடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி ஜனாதிபதி தனித்து தீர்மானங்களை எடுக்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# 2017ல் தோற்பொருள் ஏற்றுமதி மூலம் ரூபா 1800 கோடிக்கு மேல் வருமானம்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த ஆண்டு இலங்கையின் தோற்பொருள் மற்றும் பாதணி கைத்தொழிலில் பரந்த அபிவிருத்தி ஏற்பட்டதாக வர்த்தக மற்றும் கைத் தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த உற்பத்திகளுக்கு சிறந்த ஏற்றுமதிச் சந்தையும் உருவானதாக அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு புள்ளி விபரங்களை வெளியிட்டார்.

2017ஆம் ஆண்டில் பாதணி மற்றும் தோற்பொருள் ஏற்றுமதி மூலம் ஆயிரத்து 848 கோடி ரூபாவுக்கு மேலான வருமானம் கிடைத்துள்ளது.

இந்தத் துறைக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க தமது அமைச்சு பெரும் பங்களிப்பை வழங்கியதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2017இல் தேயிலை உற்பத்தி 5வீதத்தால் உயர்வு

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 இல் தேயிலை உற்பத்தி 5 சத வீதத்தினால் அதிகரித்துள்ளதாக பெருந்தோட்டத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்குக் காரணம் அரசாங்கம் கடந்த காலத்தில் தேயிலைத்தொழிற்துறைக்கு வழங்கிய நிவாரண உதவிகள், பரந்துபட்ட சேவை மற்றும் தேயிலை உற்பத்திக்கான சிறந்த காலநிலை என்பனவாகும் என்பதை அமைச்சு சுட்டிக்காட்டியது.

பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் நவின் திசாநாயக்கவின் தலைமையில் தேயிலை ஏற்றுமதியின் தற்போதைய நிலைமை குறித்தும் தேயிலை தொழில் துறையின் தற்போதைய நிலைமை குறித்தும் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. (இ-7)



# மாயக்கல்லி மலையில் புத்தர் சிலையை பிரதமர் அங்கீகரிக்கவில்லை -ஹக்கீம்

(ஏறாவூர்)

இறக்காமம் - மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கீகரிக்கவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட ஐ.தே.க. அமைச்சரை அவர் கட்டுப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுத்தான் அவர் மீது முன்வைக்கப்படுகிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இறக்காமம் பிரதேச சபை தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ஊடகவியலாளர்களின் புலமைப்பரிசில் நிதியை அதிகரிக்க நடவடிக்கை



(கொழும்பு)

ஊடகவியலாளர்களின் தொழில்துறையை மேம்படுத்துவதற்கு தேவையான சகல ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.எச். எஸ். சமரதுங்க தெரிவித்துள்ளார்.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மையை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் புலமைப் பரிசில் நிதியை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 739 ஊடகவியலாளர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளதாகவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு ஊடகப் பயிற்சிக்கான நிதி உதவி அஸிதிஸி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

இதேவேளை தகவல் அறியும் சட்டம் தொடர்பாக இந்த ஆண்டில் விரிவான வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட இருப்பதாகவும் ஊடகப் பயிற்சி நிறுவனத்தின் பணிகளும் விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும் ஊடகப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 60 ஊடகவியலாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வரையிலான நிதி உதவி வழங்கப்படுவதுடன் இந்தத் தொகை மீள அறவிடப்பட மாட்டாது என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் ரமணி குணவர்த்தன, ஏனைய அமைச்சின் உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜே.வி.பி.வேட்பாளரின் வீட்டில் தீ

(கொழும்பு)

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் கீழ் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் ஒருவர் வீட்டில் தீ பரவிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 09.15 மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)



# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மேலைத் தெல்லியூர் வீமசிட்டி விழிசிட்டி வித்தகபுரம் சிவ குருநாத சுவாமி ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்களுக்கு இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

# FCID இற்கு செல்ல நான் தயார்; பொய் என்றால் சட்ட நடவடிக்கை

## ஆறுமுகன் தொண்டமான் அறிவிப்பு



(ஹற்றன்)

ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி மன்றத்தில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக,' நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு (எப்.சீ.ஐ.டீ) முறையிட்டுள்ளதாக ஊடகங்களின் மூலம் தெரிந்து கொண்டேன். இந்த நிதி மோசடி தொடர்பில் எப்.சீ.ஐ.டீ என்னை அழைத்தால் அதற்கு முகங்கொடுக்கத் தயார்.

இந்த மோசடி பொய் என்றால் அவர்களுக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில், இவ்விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு விளக்கமளிக்கையில், அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த நேரத்திலும் எந்தவோர் சந்தர்ப்பத்திலும் எமக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பிரச்சினைகளுக்கு நாம் அதற்கு ஏற்றாப்போல் முகங்கொடுக்கத் தயாராகவுள்ளோம்.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நிதி மோசடி என சொல்லிக் கொண்டு இப்பொழுது நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு தெரிவித்துள்ள இவர்கள், கடந்த மூன்று வருட காலப்பகுதியிலும் சரி; கடந்த வருடத்திலும் சரி தூங்கிக்கொண்டு இருந்தார்களா? என தொண்டமான் கேள்வியும் எழுப்பினார்.

அத்தோடு எதிர்வரும் தேர்தலில் சேவலுக்கும், வெற்றிலைக்கும் வெற்றி வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில் இத்தேர்தலில் வெற்றியை பெற்றுக் கொள்வதற்காக இந்த கபட நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது என எண்ணுகிறேன்.

ஊவா மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சை ஜனாதிபதியே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு வழங்கியுள்ளார்.

இது ஒரு புறத்தில் வெற்றியாக அமைந்துள்ளது ஆனால் ஊவாவில் தமிழ் அதிபர் ஒருவருக்கு நேர்ந்த கதியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஆனால் இத் தமிழ் அதிபர் ஒருவருக்கு எதிராக மட்டுல்ல அனைத்து தமிழ் அதிகாரிகளுக்கும் இவ்வாறான ஒரு நிலையை எவர் உருவாக்கினாலும் அதை இ.தொ.கா. வன்மையாகக் கண்டிக்கும்.

ஊவா தமிழ்க்கல்வி அமைச்சு செந்தில் தொண்டமானிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வாய்ப்பாக அமைந்திருந்தாலும், அதை சிலர் கீரியிடமிருந்து நரியிடம் கொடுத்துவிட்டார்கள் என வர்ணிக்கின்றனர். இதை வர்ணிப்பவர்களும் ஒரு மிருகத்தைச் சேர்ந்தவர் தான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுடன் முஸ்லிம்கள் சந்திப்பு

## நாமே வெற்றி பெறுவோமென சூளுரை



(கொழும்பு)

பேருவளையையும் நாமே வெற்றி பெறுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம்களிடம் பொய்யைக் கூறி அவர்களை எனக்கு எதிராக மாற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த முஸ்லிம்களே தற்பொழுது என்னிடம் நேரில் வந்து சந்திக்கின்றனர். அத்துடன் இனி நாம் ஏமாற மாட்டோம் எனக் கூறவும் ஆரம்பித்துள்ளனர் என மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

மண்ணெண்ணெய்மொத்த விற்பனைக்கு கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் கட்டுப்பாடு விதித்ததன் காரணமாக வெதுப்பக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்க தலைவர் என்.கே.ஜயவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெயை எரிபொருளாக பயன்படுத்தியே வெதுப்பகம் சார்ந்த பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தநிலையில், இதற்கு உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் வெதுப்பக உற்பத்தி சார்ந்த பொருட்களின் விலைகளை அதிகரிக்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.


எனவே மண்ணெண்ணெய்விற்பனை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார். இல்லையேல் வெதுப்பக உற்பத்திகளின் விலை அதிகரிப்பை தடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like. 1313

Search for people, places and things Nagendram Home

### கபிலன்

வேலை பார்க்கும் இடம் கோவில் மாதிரின்னு சொல்றாங்க..



சரின்னு கோவில் மாதிரி வாரத்துக்கு ஒரு நாள் போனாலும் திட்றாங்க..

### அஸ்வின்

புருசன் தப்பு பன்னா முதல்ல சுட்டிகாட்டனும்... அப்புறமா கத்தி காட்டனும்...



பிறகு தட்டி காட்டனும் கடைசிலதான் கத்திய காட்டனும்...

### பிரகாஸ்

மனைவியிடம் மனம்விட்டு பேசினால் சண்டையே வராதாம்..



அடேய், சண்டை வந்ததே.. மனம்விட்டு பேசினதால தான்டா..!

### சுகன்யா


என்ன தான் நீ ஆணழகனாய் இருந்தாலும்



குழந்தைக்கு சோறு ஊட்டும் போது அந்த வழியா போனா நீயும் பூச்சாண்டி தான்...

### லேகிசா


இருபத்தைந்து வயதாகியும் நான் இன்னும் உருப்படலையேன்னு நினைக்கும் போது மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு...



ஆனா என் பிரண்ட்ஸ் எவனுமே இன்னமும் உருப்படலைனு நினைக்கும்போது மனசுக்கு கொஞ்ச ஆறுதலா இருக்கு...

### பிரதீஸ்

முடி நரைச்சு போயிடுமோன்னு, பயந்தது அந்த காலம்..



டை அடிக்கவாவது முடி இருக்குமா..ன்னு யோசிச்சா அது இந்த காலம்..


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில் 9வது யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கைத்தொழில் துறை அமைச்சர் தயா கமகே கலந்து கொண்டு கண்காட்சியை நாடா வெட்டி திறந்து வைத்தனர். இந்தக் கண்காட்சி இன்றும் நாளையும் யாழ்.மாநகரசபை மைதானத்தில் தொடர்ந்தும் நடைபெறும். இதில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுமார் 300 நிறுவனங்கள் தங்கள் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளதாக யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் தெரிவித்தார். இந் நிகழ்வில் சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன். ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: உ.சாளின்)

## மலசல கூடத்தில் மதுப் போத்தல்கள்



(கரணவாய்)

யாழ்ப்பாணம் பணைப் பகுதியில் உள்ள தனியார் பேருந்து தரிப்பிடத்தில் உள்ள மலசலகூடம் பாவிக்க முடியாதளவிற்கு சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாகவும் அது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவதில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மலசலகூடத்தினுள் மதுப்போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் போடப்பட்டு காணப்படுகின்றன.

மேலும் அவை குழிக்குள் சென்று அடைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதனால் மலசலகூடத்தை பாவிக்க முடியாத நிலை காணப்படுகிறது. (இ-60)

## சாரத்தை கழற்றிவிட்டு காற்சட்டையுடன் அமெரிக்காவுக்கு ஓடியவர்தான் பசில்

(கொழும்பு)

கட்சி, பதவி என்று பாராமல் இந்த நாட்டு மக்களுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல தீர்மானங்களை எடுத்துள்ளார் என இடதுசாரி கேந்திர நிலையத்தின் தலைவர் சுமீர பெரேரா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தோற்கடித்து விட்டு புதிய கட்சியை ஆரம்பித்து அதன் தலைவராக தன்னை நினைத்து செயற்படும் பசில் ராஜபக்ஷ யாருடைய தேவைக்காக செயற்படுகின்றார்?

கடந்த காலத்தில் தேர்தலில் தோற்றவுடன், சாரத்தை கழற்றி விட்டு காற்சட்டையுடன் அமெரிக்காவுக்கு தப்பி ஓடிய பசில் இன்று கதைக்கின்றார்.

அவர்களுடைய கட்சியில் யாரேனும் தோற்றுவிட்டால் அவர்களது நாடான அமெரிக்காவுக்கு ஓடுகின்றார்கள். இதற்கு காரணம் அவர்களுக்குள்ள பயமே எனவும் சுமீர பெரேரா மேலும்தெரிவித்துள்ளார். (இ-7)

## 'கண்டல் காடுகள்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பா.இரகுவரனின் கண்டல் காடுகள் நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் கே.முருகானந்தன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ். குணசீலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நூலின் முதற் பிரதியை இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் பெற்றுக் கொள்வார். (இ-10-19)




ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை.

வடக்கு குபேரவாசல் கோபுர கும்பாபிஷேகம்

ஸ்ரீமகா மேருசக்கர இயந்திர கும்பாபிஷேகம்

நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை

சுபவேளை காலை 7.30 மணி முதல் 8.27 மணி வரை

அம்பாள் அடியார்கள் அனைவரும் வருகைதந்து

நல்லருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாக சபை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை.



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 17 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/அரசதொழில்<br>தொ.இ: B/7340 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 20 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/6517 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'5'<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>தொ.இ: B/7341 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: BA, MA/. ஆசிரியர்<br>தொ.இ: G/6518 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 26 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>தொ.இ: B/7344 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 79 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BSc/அரசதொழில்<br>தொ.இ: G/6520 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/7346 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 14 செவ் 7 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/6521 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மாணவர்களின் பேரணி மீது நீர்த்தாரைப் பிரயோகம்



(கொழும்பு)

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்டு வரும் எதிர்ப்புப் பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப். பேரணியொன்றை முன்னெடுத்தது.

இந்நிலையில், குறித்த எதிர்ப்புப் பேரணி கொழும்பிற்குள் நுழைவதற்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பேரணியால்கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலிவீதி தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# அதிபர் மண்டியிட்ட விவகாரம்

## பெண் சமூகத்தை இழிவுபடுத்தியவர்களின் பதவிகள் உடனே பறிக்கப்படல் வேண்டும்

### ஆசிரியர் சங்கம் போர்க்கொடி; ஆர்ப்பாட்டத்திற்கும் ஏற்பாடு

(கொழும்பு)

ஆசிரிய சமூகத்துக்கும் பெண்கள் சமூகத்திற்கும் தலைகுனிவை ஏற்படுத்திய ஊவா மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அதிகாரிகளின் பதவிகள் உடன்பறிக்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இக்கோரிக்கையை முன்னிறுத்தி பாரிய கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவும் இலங்கை ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஹற்றன் பேரூந்து நிலையத்திற்கு அருகில் பிற்பகல் 2.30 மணிக்கு இக்கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கல்விச் சமூகத்தையும், பெண்கள் சமூகத்தையும் கீழ்த்தரமாக அவமானப்படுத்திய முதலமைச்சர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரை உடனடியாக பதவிநீக்குமாறும், அவர்களை உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு கோரியே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள் ளது.

பதுளை தமிழ் மகளிர் வித்தியாலய அதிபரை ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் மூலம் ஊவா மாகாண முதலமைச்சர் தன்னுடைய இல்லத்திற்கு அழைப்பித்துள்ளார். அங்கு, பாடசாலையில் ஒரு மாணவரை அனுமதிக்காமைக்காக அதிபரை பலவந்தமாக முழங்காலில் மண்டியிட வைத்து மன்னிப்புக்கோரச்செய்துள்ளார்.

இச்சம்பவம் ஊடகங்களில் வெளியாகி எதிர்ப்புகள் கிளம்பியதால் கடந்த 9ஆம் திகதி சம்பந்தப்பட்ட அதிபரை மாகாண கல்வி அமைச்சுக்கு அழைத்து அமைச்சின் செயலாளர் ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் பதுளை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மறுப்பு அறிக்கையொன்றை அதிபரை வற்புறுத்தி ஊடகங்களுக்கு வழங்கச் செய்துள்ளனர்.

இவற்றையும்மீறி தொழிற் சங்கங்கள், பெண்கள் அமைப்புகள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உண்மைச் செய்திகள் ஊடகங்களில் வெளியானதால் ஊவா மாகாணகல்வி அமைச்சின் செயலாளரும் வேறு அதிகாரிகளும் மீண்டும் பதுளை தமிழ் மகளிர் வித்தியாலத்திற்குச் சென்று அதிபரை அச்சுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

## தொலைபேசி அழைப்புக்கள் பகுப்பாய்வு

### குற்றப் புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் தொலைபேசி அழைப்புக்களை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று முன்தினம் நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

கடத்தல், கப்பம் கோரல் தொடர்பில் இதன்போது பல தகவல்களை அம்பலப்படுத்தி வருவதாகவும் அது தொடர்பிலான விசாரணைகள் தொடர்வதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப்பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நீதிவான் லங்கா ஜெயரத்னவுக்கு அறிவித்தார்.

அதன்படி இந்த விவகாரத்தில் இதுவரை கைது செய்யப்பட்ட 9 பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள காமினி, மெண்டிஸ் ஆகிய இரு முன்னாள் கடற்படை புலனாய்வாளர்களையும் எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதன்போது மன்றுக்கு விசாரணைகளை தெளிவுபடுத்திய பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, விசாரணைகளை மிக விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும், தற்போது கடத்தல், கப்பம் கோரியோர் தொடர்பில் மேலும் தகவல்களை வெளிப்படுத்த அடையாளம் காணப்பட்ட தொலைபேசி இலக்கங்களை மையப்படுத்திய விசேட பகுப்பாய்வுகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

கடற்படை புலனாய்வுப் பிரிவின் முன்னாள் வீரரான கஸ்தூரிகே காமினி, அருண துஷார மெண்டிஸ் ஆகியோரின் விளக்கமறியலை நீடித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ-7)

# தைப்பூச மஞ்சத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச மஞ்சத் திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்கு பூசையைத் தொடர்ந்து பால் குடப்பவனி இடம்பெற்று 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு பொங்கல் இடம்பெற்று நண்பகல் 12.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளது. மாலை 6 மணிக்கு சந்திரக்கிரகணம் இடம்பெறவுள்ளதால் பிற்பகல் 1.30 மணிக்கு மஞ்சம் திரு வீதியுலா இடம் பெறும்.

பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் ஆலயத்தில் முன்பதிவுகளை மேற்கொள்ளலாம் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7-78)

# அஸாத் சாலிக்கு நீதி கிடைக்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்காக குரல் கொடுக்கும் போராட்டங்களை நடத்தும் ஒருவரான அஸாத் சாலிக்கு நீதி கிடைக்க வேண்டுமெனவும் கடந்த காலங்களில் அஸாத் சாலிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

புதுக்கடை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபையை வெற்றி கொண்டு மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு காண வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த சந்திப்பில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# ‘சிறுவர் உளநலம்’ நூல் வெளியீடு

(யாழ்ப்பணாம்)

சாந்திகம் நிறுவனத்தின் ‘‘சிறுவர் உள நலம்’’ (3ஆம் பதிப்பு) நூல் வெளியீட்டு விழா நாளை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராக அவுஸ்திரேலியா மருத்துவ உதவி நிதியத் தலைவர் வைத்தியக் கலாநிதி பொன்.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## பாசக்கார தோழிகள்!

(நேற்றைய தொடர்ச்சி)

போகலாம்னு இருக்கேன். அப்பாவுக்கு உடம்புக்கு முடியல. படுத்த படுக்கையா கிடக்கிறாரு.

இனிமே அவரால வேலைகுப் போக முடியாது. அம்மா சித்தாள் வேலைக்குப் போறாங்க. அவங்களுக்கும் அடிக்கடி உடம்பு சரியில்லாமப் போகுது.

அதுதான் படிப்பை நிறுத்திடலாம்னு இருக்கேன். ஜவுளிக் கடைக்கு வேலைக்குப் போனா, மாசம் நாலாயிரம் சம்பளம் கிடைக்கும் என்றாள்.

அவளருகில் நின்றுகொண்டிருந்த செல்வியின் அம்மா, "ஆமாம்மா. செல்வி அப்பா படுத்த படுக்கையாயிட்டாரு!" என்றார்.

பிரியாவுக்கு அழுகை வந்தது. இந்தச் செய்தி பெரிய அதிர்ச்சியாக இருந்தது. கண்களில் கண்ணீருடன் நின்று கொண்டிருந்த பிரியாவின் அருகில் வந்த அவளுடைய அப்பா, "ஏம்மா அழுற?" என்று பதற்றத்துடன் கேட்டார்.

"அப்பா, செல்வி படிப்பை நிப்பாட்டப் போறாளாம்" என்று அழுது கொண்டே கூறினாள் பிரியா. அவள் தோளைத் தடவிக் கொடுத்த அப்பா, "நீங்க பேசிக்கிட்டு இருந்தப்பவே வந்துட்டேம்மா. என்ன பண்றது.

செல்வி சூழ்நிலை அப்படி அமைஞ்சு போச்சு. வாம்மா போகலாம்!" என்று அழைத்துச் சென்றார். பிரியா சோகமானாள். செல்வியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றாள்.



புதிய பள்ளிக்குள் தன் அப்பாவுடன் நுழைந்தாள் பிரியா. அவளுக்குச் சந்தோசமே இல்லை. நீண்ட நாள் தோழி, அருகில் இல்லையே!

ஏன் இல்லை? எதிரில் வருவது யார்? கண்களைக்கசக்கி விட்டுப்பார்த்தாள்பிரியா. அட, செல்வி! அருகில் வந்தவளை அப்படியே கட்டிக்கொண்டாள் பிரியா.

"உன் ஆசை நிறைவேறிடுச்சு பிரியா. இண்டு பேரும் ஒரே குரூப். ஒரே கிளாஸ்!" என்றாள் செல்வி உற்சாகத்துடன்!

"படிப்பை நிப்பாட்டப் போறதா சொன்னியேடி. பொய் சொன்னியா? இத்தனை நாளா அதை நினைச்சு கவலைப்பட்டேன் தெரியுமா" என்றாள் பிரியா.

"என்னாலேயே இத நம்ப முடியலடி. தெய்வம் போல ஒருத்தர் எனக்கு உதவி செஞ்சார். எங்கம்மாகிட்ட பேசிச் சம்மதிக்க வைச்சார்!"

"யாருடி அவரு?, நான் அவருக்கு நன்றி சொல்லணும்" ஆர்வமாகக் கேட்டாள் பிரியா.

செல்வி விரலால் காட்டிய திசையில் அப்பா நின்று கொண்டிருந்தார்.

"நானும் என்னோட நண்பர்களும் சேர்ந்து செல்வியை ஸ்கூலில் சேர்த்துவிட்டோம்மா, ஆளுக்கொரு செலவைப் பகிர்ந்துகிட்டோம்" என்றவர் மீண்டும் தொடர்ந்தார். "டி.சி. வாங்க வந்த நாளிலிருந்தே உன்னைக் கவனிச்சுக்கிட்டு இருந்தேன். முக்த்தை உம்முன்னு வச்சுக்கிட்டு இருந்தே.

எதுலேயும் ஆர்வம் காட்டாம இருந்தே. செல்வி படிப்பைப் பாதியில நிப்பாட்டப் போறத நினைச்சுத்தான் நீ கவலைப் பட்டுக்கிட்டு இருக்கறதா தோணுச்சு. உடனே செல்வியோட அம்மாவைப் பார்த்துச்சம்மதம் வாங்கி ஸ்கூலுல சேர்த்தாச்சு!"

"இத ஏம்பா முதலிலேயே என்கிட்ட சொல்லலே" என்று பொய்க் கோபத்துடன் கேட்டாள் பிரியா.

"சஸ்பென்ஸா இருந்தா அதுல ஒரு திரில் இருக்குமேன்னு தாம்மா சொல்லல. செல்வியையும் சொல்லச் சொல்லல!" என்றார்.

"ஸ்வீட் அப்பா!" என்று அப்பாவைக் கட்டிக்கொண்டாள் பிரியா.

(முற்றும்)




- 1695 - ஓட்டோமான் பேரரசின் மன்னன் இரண்டாம் அஹமது இறந்ததை அடுத்து இரண்டாம் முஸ்தபா மன்னனானான்.
- 1880- தோமஸ் எடிசன் வெள்ளொளிர்வு விளக்குக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1888- தேசிய புவியியற் கழகம் (National Geographic Society)வோஷிங்டன் டிசியில் அமைக்கப்பட்டது.
- 1915- ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் ஹெயிட்டியை ஆக்கிரமித்தனர்.
- 1918- பின்லாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1924- விளாடிமிர் லெனினின் உடல் மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மாலை 4:00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.
- 1926- ஜோன் லோகி பயார்ட் முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்திக் காட்டினார்.
- 1938- நியூயோர்க்கில் நயாகரா நீர்வீழ்ச்சியில் நயாகரா பாலம் உடைந்து வீழ்ந்தது.
- 1944- இரண்டாம் உலகப் போர்: அச்சு நாடுகளின் இரண்டாண்டு லெனின்கிராட் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.
- 1945- இரண்டாம் உலகப் போர்: லட்சக்கணக்கான யூதர்கள் குரூரமாகக் கொல்லப்பட்ட போலந்தின் அவுஷ்விட்ஸ் சித்திரவதை முகாமில் எஞ்சியிருந்த கைதிகள் 7,600 பேர் சோவியத் செம்படையினாரால் விடுவிக்கப்பட்டனர்.
- 1962- இலங்கையில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசுக்கு எதிராக இலங்கைப் படைத்துறையினர் சிலரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டது.
- 1967- அப்பொலோ 1 விண்வெளி வீரர்கள் மூவர் கென்னடி விண்வெளி மையத்தில் தமது விண்கலத்தைப் பரிசோதிக்கும் போது இடம்பெற்ற தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.
- 1973 - வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்பாடு பாரிசில் எட்டப்பட்டது.
- 1996- நைஜரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மஹமான் ஊஸ்மன் பதவியிலிருந்து அகற்றப்பட்டு இராணுவத் தளபதி இப்ராகிம் மயினாசரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.
- 2002- நைஜீரியாவின் லாகோஸ் நகரில் இராணுவக் களஞ்சியமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில்1,000 பேருக்கு மேல்கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1890- சுவாமி சகஜானந்தா, தமிழக ஆன்மிகவாதி, அரசியல்வாதி (இ. 1959)
- 1934- எடித் கிரசான், பிரான்சின் 160வது பிரதமர்
- 1935- கோமல் சுவாமிநாதன், தமிழக எழுத்தாளர், திரைப்பட இயக்குநர், இதழாளர் (இ. 1995)
- 1945- நெல்லைக் கண்ணன், தமிழகப் பேச்சாளர், பட்டிமன்ற நடுவர்
- 1946- விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன், தமிழக நாட்டுபுறவியலாளர், கிராமிய இசைக் கலைஞர், கல்வியாளர்
- 1956- மிமி ரோகேர்ஸ், அமெரிக்க நடிகை
- 1956- அமர் சிங், உத்தரப் பிரதேச அரசியல்வாதி
- 1965- ஆலன் கம்மிங், ஈசுக்கொட்டிய-அமெரிக்க நடிகை
- 1974- சமிந்த வாஸ், இலங்கைத் துடுப்பாளர்
- 1976- சிரேயசு தள்பதே, மராத்தி, இந்திய நடிகர்
- 1979- டேனியல் வெட்டோரி, நியூசிலாந்து துடுப்பாளர்

**இறப்புகள்**

- 1596- பிரான்சிஸ் டிரேக், ஆங்கிலேய நாடுகாண் கடற்படைத் தலைவர் (பி. 1540)
- 1814- யோஃகான் ஃவிக்டெ, செருமானிய மெய்யியலாளர் (பி. 1762)
- 1893- மகா வைத்தியநாத ஐயர், கர்நாடக இசைப் பாடகர் (பி. 1844)
- 1901- ஜூசெப்பே வேர்டி, இத்தாலிய இசையமைப்பாளர் (பி. 1813)
- 1922- நெல்லி பிளை, அமெரிக்க ஊடகவியலாளர் (பி. 1864)
- 1965- விருகம்பாக்கம் அரங்கநாதன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீக்குளித்து உயிர்நீத்த போராளி (பி. 1913)
- 1967- எட்வேர்ட் வைட், அமெரிக்க விண்வெளி வீரர் (பி. 1930)
- 2009- ரா.வெங்கட்ராமன், இந்தியாவின் 8வது குடியரசுத் தலைவர் (பி. 1910)
- 2010- ஜே. டி. சாலிஞ்சர், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1919)
- 2010- ஓவர்ட் சின், அமெரிக்க எழுத்தாளர், வரலாற்றாசிரியர் (பி. 1922)
- 2014- பீட் சீகர், அமெரிக்கப் பாடகர் (பி. 1919)

**சிறப்பு நாள்**

- பன்னாட்டு பெரும் இன அழிப்பு நினைவு நாள்



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனாமடம் ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 120 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 80 |
| கரட் | 80 | 160 | 100 |
| பூசணி | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 180 |
| பாகற்காய் | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 200 | 120 | 240 |
| லீக்ஸ் | 150 | 240 | 220 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 800 |
| போஞ்சி | 150 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 30 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 120 | 200 | 250 |
| முள்ளங்கி | 20 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 80 | 80 |

ஒரு தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால்
அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்!
- கவிஞர் வாலி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## இரண்டு கோடி ரூபாய் விவகாரம் தமிழ் மக்கள் சும்மா விடமாட்டார்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்திடம் இருந்து தலா இரண்டு கோடி ரூபாயை இலஞ்சமாகப் பெற்றுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் முன்வைத்த குற்றச்சாட்டு மிகப்பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் கூடுகின்ற இடங்களிலெல்லாம் இரண்டு கோடி ரூபாய் விவகாரம் பற்றிய பேச்சாக இருப்பதைக் காண முடிகின்றது.

இதை நாம் சொன்னால் நாமே திட்டமிட்டுக் கூறுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் வரலாம்.

எதுவாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு கோடி ரூபாயை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதென்பதும் அந்த நிதியில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதும் தவறான காரியமல்ல.

அதேநேரம் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தால் இரண்டு கோடி ரூபாய் தரப்படும் என்ற நிபந்தனையின் கீழ், வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து கையுயர்த்தியவர்களுக்கு இரண்டு கோடி ரூபாயை அரசாங்கம் வழங்குவதாக இருந்தால்,

அந்த நிதியை அபிவிருத்திக்கானது என்று கூறுவதை எந்த வகையிலும் ஏற்க முடியாது.

கையுயர்த்தினால் காசு என்றால், அங்கு பேரம் பேசல் என்ற விடயம் வந்துவிடுவதுடன் அந்தப் பணம் இலஞ்சத்துக்குரியதாகவும் ஆகிவிடும்.

பரவாயில்லை; வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாகக் கையுயர்த்தினோம் அதற்காக அரசாங்கம் இரண்டு கோடி ரூபாயை எங்களுக்குத் தந்தது.

அந்த நிதியைக் கொண்டு இந்த அபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொண்டோம் என்று சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் தெரிவித்து தமது நேர்மைத் தன்மையை நிரூபித்தால், அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளவும் தயங்கமாட்டார்கள்.

ஆனால் அத்தகையதொரு விடயத்தை நாடுவதை விடுத்து, ஒரு சிலர் பணம் வாங்கவில்லை என்கின்றனர். இன்னும் சிலர் நாம் பணம் வாங்கி அபிவிருத்தித் திட்டங்களைச் செய்தோம் என்கின்றனர்.

இங்குதான் மக்கள் கடுமையாகக் குழப்பமடைகின்றனர். இந்தக் குழப்பம் சாதாரணமானது என்று எவரும் நினைத்துவிடக் கூடாது.

ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக்கால போக்கில் தமிழ் மக்கள் மிகுந்த சந்தேகமும் ஐயுறவும் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இரண்டு கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றுக்கொள்ளப்பட்டதான செய்தியும் வெளியாகி இருக்கும்போது, மக்களின் அனுமானங்கள் வேறுவிதமாகவே அமையும்.

ஆகையால் பணத்தை பெற்றுக்கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள், தாங்கள் பெற்றுக் கொண்ட பணத்துக்குச் செய்த வேலைத்திட்டங்கள் என்ன? என்பதை ஆதாரபூர்வமாக மக்கள் மத்தியில் முன்வைக்க வேண்டும்.

# ஆளுங் கட்சிக்கு வழங்கப்பட்ட 2 கோடியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 2 கோடிரூபாயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வழங்கப்பட்டுள்ளது என்ற புதிய தகவலை சிறிலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வெளியிட்டுள்ளார்.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொண்டதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைபு அரசில் அங்கம் வகிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுளளார்.

மேலும் ஜே.வி.பி. மற்றும் பொது எதிரணி ஆகியோருக்கு இந்த பணம் வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியாக முன்னேறாத எந்த இனமும் அபிவிருத்தியினை பெற முடியாது. மக்கள் தற்போது ஏமாற்றத்தில் உள்ளார்கள். கடந்த காலங்களில் வாக்களித்து அனுப்பிய தமது பிரதிநிதிகள் தமக்காக ஒன்றையும் செய்யவில்லை என்பதனை உணர்ந்துள்ளார்கள்.

ஆகவேதான் இந்த தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை விட, யாருக்கு வாக்களிக்க கூடாது என்பதில் மக்கள் தெளிவாக உள்ளார்கள்.

அரசு தருவதை தான் நாங்கள் வாங்க வேண்டும் என்றால், இத்தனை வருட போராட்டம் எதற்கு? இத்தனை உயிர்களின் தியாகங்கள் எதற்கு? எதற்காக இவற்றை நாங்கள் செய்துள்ளோம். ஆகவே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்பதை உணர்ந்துள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலத்தில் எங்களுக்கு உரிமையையும் தரவில்லை, அபிவிருத்தியையும் தரவில்லை என்பதனை மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

அடுத்து அதிகமாக பேசப்படும் விடயம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது என்ற விடயம். தேசிய திட்டமிடலின் அடிப்படையில் ஜனாதிபதியால்தான் இந்த நிதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதி அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமே இந்த நிதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் முன்னாள் ஜனாதிபதியின் பொது எதிரணியில் உள்ள 50 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த பணம் வழங்கப்படவில்லை.

ஜே.வி.பி. என்ற எதிரணியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணம் வழங்கப்படவில்லை. இவ்வாறு பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பதினைந்து பேரும் தமக்கு 2 கோடி வழங்கப்பட்டுள்ளதாக ஒத்துக் கொண்டுள்ளனர். எனினும் கூட்டமைப்புக்கு மக்கள் கொடுத்த ஆணை எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு தமது உரிமைக்காக போராடுமாறே. ஆனால் இவர்கள் அரசோடு அங்கம் வகித்து கொணடு இங்கு இன்னொரு முகத்தை காட்டுகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனின் பதவி முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியில் இருந்த சந்திரகுமாருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது அரசால் கொடுக்கப்படுகின்ற பதவி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 2 கோடி ரூபாய் பணம் பெற்று கொண்டதனை ஒப்புக் கொண்டதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கின்றது என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இனியும் மக்களை உசுப்பேத்தியும் பழைய கதைகளை பேசியும் மக்களை ஏமாற்ற முடியாது. எதிர் வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அளிக்கும் வாக்குக்கள் ஒரே வாக்குகள்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையுடன் வெல்ல முடியாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சி அவர்களுக்கு ஆதரவு வழங்கி ஆட்சியமைக்க பார்க்கும்.

ஆகவே மக்கள் இரு கட்சிகளையும் புறக்கணிக்க வேணடும். ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து எமது மக்களுடைய அபிவிருத்தி நோக்கி பயணிப்போம் என்றார். (ம-4)

## ஆணைக்குழுவின் அறிக்கைகள் அடுத்த வாரம் வெளியிடப்படும்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து முக்கிய விடயங்களையும் வெளிப்படுத்த இருப்பதாக ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிணைமுறி அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி சில குழுக்கள் வலியுறுத்தி வந்தன. பிணைமுறி மோசடி, பாரிய நிதி மோசடி தொடர்பான அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால், அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட குழுக்கள் மௌனம் சாதிக்கின்றன. அதற்கான காரணம் புரியவில்லை. இந்நிலையில், அனைத்து கட்சித் தலைவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை அழைத்து விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளேன். இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து முக்கிய விடயங்களையும் வெளிப்படுத்த உள்ளேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ்.பிரதேசத்தில் மல்லாகம், அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், வீமன்காமம், வறுத்தலை விள்ான், தையிட்டி, பலாலி, மின்சார நிலைய வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், ஞானம்ஸ் விடுதி, இராணுவ முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், பலாலி விமானப் படை ஓய்வுகாலவிடுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஆனந்தபுரம், உதயநகர், தொண்டமான் நகர், கிருஸ்ணபுரம், அம்பாளகுளம், பாரதிபுரம், மலையாளபுரம், விநாயகபுரம், விவேகானந்தநகர், இரணைமடு, கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்றெட் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நெடுங்குளம் கிராமம், அரசமுறிப்பு கிராமம், ராஜ் மீன பிடிக் கூட்டுததாபனம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**விருந்தினர் வருவதற்கான அறிகுறிகள் எவை?**

பூனை உட்கார்ந்து கையை நக்கினால் விருந்தினர்கள் வருவார்கள் என கூறப்படுவதுண்டு. காகம் ஒரு வித்தியாசமான சப்தத்தில் கரைந்தால் விருந்தினர்கள் வருவார்கள் எனக் கூறுவார்கள். அரிசி புடைக்கும் போது முறம் தவறி விழுந்தால் விருந்தினர் வருவதற்கான அறிகுறி என்பார்கள். இவையெல்லாம் பண்டைக்காலம் முதல் உள்ள நம்பிக்கைகளாகும். (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நமது உள்ளங்களை திறந்து வைத்திருந்தால், உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.
- கடவுளை நம் தந்தையாக ஒப்புக் கொண்டு விட்டதால், நம்முடன் வாழ்பவர்களை சகோதரர்களாக அங்கீகரிக்க வேண்டும். அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.
- பணிவுக்கும், மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் பல நன்மைகளைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கும் வரை உண்மையான பக்தி உண்டாகாது.
- மனிதன் பிறந்தது இயற்கையை வெல்வதற்காகத் தான். அதற்குப் பணிந்து போவதற்கல்ல.
- சக்தி என்பது நன்மை, தீமை என்னும் இருவழிகளில் வெளிப்படுகிறது. கடவுளும், தீயவனான அரக்கனும் எதிரெதிர் நீரோட்டம் உள்ள ஒரே ஆறுதான். நல்ல வழியில் சக்தியை செலவழிப்பதே உத்தமம்.
- இல்லறம் நடத்துபவனுக்கும், துறவறம் பூண்டவனுக்கும் இடையில் உயர்வு தாழ்வு இல்லை. அவரவர் நிலையில் அவரவர் சிறந்தவர்கள்.
- பக்தியில் ஈடுபடும் போது கடவுளைத் தனியாகவும், நம்மை வேறாகவும் பிரித்துப் பார்க்க வேண்டும்.

# இறுதிக்குள் நுழைந்து சென்.பற்றிக்ஸ் சாதனை



யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி தேசிய 18 வயதுப்பிரிவு பிரிவு-1 அணிகளுக்கிடையிலான கால்ப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்குள் நுழைந்து சாதனை படைத்துள்ளது.

இலங்கை பாடசாலைகள் கால்ப்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், 18 வயது, பிரிவு - 1 அணிகளுக்கிடையிலான கால்ப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டம் ஒன்று கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை இராஜகிரிய மொறகஸ்முல்ல மைதானத்தில் நடைபெற்றது.

அரையிறுதியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென்.பீற்றர்ஸ் அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் எந்தவித கோல்களும் பதிவு செய்யுவில்லை.

இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் அணியின் அபிசன் கோல் ஒன்றை அடித்தார். அந்தக் கோல் இறுதிவரையில் நீடிக்க, சென்.பற்றிக்ஸ் அணி 1:0 என்ற கோல்கள் கணக்கில் வென்று, இறுதிக்குள் நுழைந்தது. (க-26)

# சாதனை வெற்றியைப் பதிவு செய்த யு.கே. ஏ மற்றும் பி அணிகள்





மாதனை விளையாட்டுக் கழகத்தால் புதுவருடத்தை வரவேற்கும் முகமாக 31.12.2017 அன்று நடத்தப்பட்ட மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரில் UK-A மற்றும் UK-B ஆகிய இரு அணிகள் UK விளையாட்டுக் கழகத்தினரால் களம் இறக்கப்பட்டு இருந்தன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மிகப்பலம் வாய்ந்த அணிகள் அனைத்தும் மோதியிருந்த நிலையில் UK_A தனக்காக ஒதுக்கப்பட்ட குழுவில் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி கொண்டது. அதே போல மற்றைய குழுவில் UK_B அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி கொண்டது.

இறுதிப் போட்டியில் UK_A மற்றும் UK_B அணிகள். வடமராட்சியின் நட்பு வெற்றி அணியாக தெரிவு செய்யப்பட்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக சஜா தெரிவானதுடன் தொடர்நாயகனாக மிகி தெரிவு செய்யப்பட்டார். (க-60)

## ஐ.பி.எல் ஏலத்தில் இலங்கை வீரர்கள்

2018-ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் ஏலம் பெங்களூரில் இன்றும் நாளையும் நடக்கிறது.

இதில் கலந்துகொள்ளும் 18 இலங்கை கிரிக்கெட் வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

- லசித் மலிங்க
- நிரோசன் டிக்வெல்ல
- குசல் பெரேரா
- அகிலா தனஞ்செய
- லக்சன் சண்டகன்
- சசித்ரா செனயன்யகே
- உபுல் தரங்க
- அசேலா குணரத்னே
- திசேரா பெரேரா
- ஏஞ்சலா மத்யூஸ்
- தில்சன் முனவீரா
- சீக்குஜி பிரச்சன்னா
- தஷூன் ஷனகா
- துஸ்மண்டா சமீரா
- நுவன் குலசேகரா
- சுராங்க லக்மல்
- தஞ்செய சில்வா
- இசுரு உடனா (க)

# பெண்களுக்கான மாவட்ட துடுப்பாட்ட அணித்தெரிவு

வடமாகாண, மாவட்டங்களுக்கிடையில் நடைபெறவுள்ள துடுப்பாட்ட போட்டிகளுக்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணித்தெரிவு நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் கே.சசிகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட தெரிவு அணியில் இணைய விரும்பும் வீராங்கனைகள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர், டானியல் மதியழகன் 0777 376975 மற்றும் விபுலன் 0773405393 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே துடுப்பாட்டம் விளையாடும் பெண்கள் உள்ளனர்.

அவர்களைத் தவிர மேலதிகமாக, தங்களை வெளிப்படுத்தாமல் இருக்கும் பெண்களையும், அணியில் உள்வாங்கும் அடிப்படையிலேயே புதிய வீராங்கனைகள் அழைக்கப்பட்டுள்ளனர். (க-26)

# கோடிகள் புரளும் ஐ.பி.எல் ஏலம் பரபரப்பாகிறது பாரத தேசம்

2018ஆம் ஆண்டுக்கான 11ஆவது சீசன் ஐ.பி.எல் தொடர் கோலாகலமாக தொடங்க இருக்கிறது. இத்தொடரில், பங்கேற்கும் அணிகளில் விளையாட இருக்கும் வீரர்களுக்கான ஏலம் இன்றும் நாளையும் பெங்களூரில் நடக்கிறது. ஏற்கனவே 18 வீரர்கள் 8 அணிகள் மூலம் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி, ரெய்னா, ஜடேஜா ஆகியோர் தக்கவைக்கப்பட்டுள்ளனர். வீரர்கள் ஏலத்தில் 360 இந்தியர்கள் உட்பட 578 வீரர்கள் இறுதிப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இந்தியர்களில் 62 பேர் சர்வதேச போட்டியில் விளையாடிய வீரர்கள் ஆவர்.

இரண்டு நாட்கள் நடைபெறும் ஏலத்தில் ஒவ்வொரு அணியும் குறைந்தபட்சம் 60 கோடிக்கு வீரர்களை ஏலத்தில் எடுக்க வேண்டியிருக்கும். அதே நேரத்தில் அதிகபட்சமாக 80 கோடி ரூபாய் செலவழித்து 25 பேர்கொண்ட அணியை ஏலத்தில் எடுக்கலாம். இந்த தொகை கடந்த ஆண்டு 66 கோடி ரூபாயிலிருந்து 80 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீரர்களின் ஏலப்பட்டியலில் அதிகபட்ச அடிப்படை விலையாக ரூ.2 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் 36 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் 13 பேர் இந்தியர்கள், 23 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள்.

ரூ.1.5 கோடி அடிப்படை விலையில் 32 வீரர்களும், ரூ. ஒரு கோடிக்கு 31 வீரர்களும், ரூ.75 இலட்சத்துக்கு 23 வீரர்களும், ரூ.50 இலட்சத்துக்கு 122 வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். (க)

# இந்திய அணியை செப்பேல் அணியாக மாற்ற நினைத்தார் அவர் - சௌரவ் கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சவுரவ் கங்குலி, தனது புத்தகத்தில், பயிற்சியாளர் கிரேக் சேப்பல் தனது கிரிக்கெட் வாழ்வை அழிக்க முயன்றதாக தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சவுரவ் கங்குலி, 'Eleven Gods And A Billion Indians' எனும் புத்தகத்தை எழுதியுள்ளார். சுமார் 500 பக்கங்கள் கொண்ட இந்த புத்தகத்தை, ஐ.பி.எல் தொடரின் போது வெளியிடவுள்ளார்.

இந்த புத்தகத்தில் இந்திய கிரிக்கெட்டைப் பற்றிய பல உண்மைகள் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இந்திய அணியின் பயிற்சியாளராக கிரேக் சேப்பல் பதவியேற்ற பின், இந்திய அணியில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து கங்குலி எழுதியுள்ளார்.

மேலும், கிரேக் சேப்பல் குறித்து கங்குலி புத்தகத்தில் கூறுகையில்,

'கடந்த 2005ஆம் ஆண்டு சிம்பாவே தொடருக்கு முன்னதாக ஒருநாள் மாலையில், கிரேக் சாப்பல் டெஸ்ட் அணிக்கான பட்டியலை என்னிடம் காட்டினார்.

நான் அதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். ஏனெனில், அந்த பட்டியலில் முக்கிய வீரர்கள் எவரும் இடம்பெற்றிருக்கவில்லை. அவர் என்ன செய்ய முயல்கிறார் என்று நான் குழம்பினேன்.

அந்த தொடருக்கு முன்னதாக, ஏதோ தவறாகவுள்ளது என்று நான் நினைத்தேன். அவர் என்ன செய்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், ஏதோ தவறாக முடியப் போகிறது என்பது மட்டும் எனக்கு கண்டிப்பாக தோன்றியது.

இந்திய கிரிக்கெட்டில் அவருடைய அணுகுமுறை வேறு விதமாக இருந்தது. அது எதிர்வினை ஆற்றக் கூடியதாக எனக்கு தெரிந்தது.

எதுவாக இருந்தாலும், கடந்த 2003 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தொடருக்கு தயாராக எனக்கு உதவிய கிரேக் சேப்பல், சிம்பாவே தொடரில் அவ்வாறு இல்லை.

அவரின் பரிந்துரைகளை நான் புறந்தள்ளினேன். அவர் விரும்பிய நபர்கள், இந்திய கிரிக்கெட்டிற்கு மூன்று மாதங்களுக்கு அங்கு இருந்தபோது, நிறைய செய்திருந்தார்கள் என்பதை அவருக்கு நான் தெளிவாக எடுத்துரைத்தேன்.

கடினமான சூழலில் முடிவுகளை எடுக்கவும், சூழ்நிலையை புரிந்து கொள்ளவும் அவருக்கு நிறைய கால அவகாசம் தேவைப்பட்டது.

அவர், இந்திய அணியை 'கிரேக் சேப்பலின் அணி'-யாக மாற்ற நினைக்கிறார் என்பது எனக்கு மிகவும் தெளிவாக புரிந்தது' என தெரிவித்துள்ளார். (க)

# பத்மபூஷண் விருது பெறுகிறார் சாதனை தலைவர் டோனி



இந்தியாவில் ஆண்டு தோறும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு மத்திய அரசு உயரிய விருதான பத்மஸ்ரீ, பத்ம விபூஷண், பத்மபூஷண் விருதுகளை வழங்கி கௌரவப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான பத்மஸ்ரீ, பத்ம பூஷண், பத்ம விபூஷண் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கிரிக்கெட் விளையாட்டில் சாதனை படைத்து வரும் இந்தியா அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனிக்கு இந்த ஆண்டின் பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த 2009 ஆம் ஆண்டு டோனிக்கு பத்மஸ்ரீ விருது அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ். விசேட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

அத்துடன், இவர்களிடமிருந்து எழுபத்தெட்டாயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். பொம்மைவெளி மற்றும் மாதகல் பகுதிகளை சேர்ந்த 32 மற்றும் 38 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களை மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ் விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ம)

## 10 டிரில்லியன்...

லியன் ரூபாவேயாகும் எனத் தெரியவந்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி, அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், அரச சொத்துக்கள் அல்லது மக்கள் நலன் பேணலுக்காக எஞ்சிய 09 டிரில்லியன் ரூபாயை செலவு செய்தமைக்காக எவ்வித ஆவணமும் நிதி அமைச்சிடம் இல்லையென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானத்தை இல்லாமல் செய்து கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள அநீதிகள் தொடர்பிலும் ஜனாதிபதி விளக்கினார். கடந்த 50, 60 வருட காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு நேரடியாகக் கிடைக்கப்பெற்ற வருமானங்கள் அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் எவ்வித அனுமதியுமின்றி கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதுடன், அரசாங்கத்துடன் தொடர்புபட்டிருந்த மற்றும் தொடர்புபட்டிருக்கும் சிலரின் வியாபாரத்திற்கு நன்மை அளிக்கும் வகையில் மிகவும் சூட்சுமமான முறையில் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் மீள் ஏற்றுமதி மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் பொருட்களின் விலையை தீர்மானிப்பதில் அரசியல் அதிகாரத் தரப்புடன் உள்ள தொடர்பு காரணமாக இடம்பெறும் அநீதிகள் தொடர்பிலும் தமக்கு தெரிய வந்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இந்த நிலைமைக்கு மத்தியில் நாட்டை நல்ல நிலைக்குக் கொண்டுவருவது சவாலானது என்றபோதும் தன்னால் முடிந்த அனைத்தையும் இதற்காக தாம் மேற்கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த ஊழல் மோசடிகளை நாட்டுக்கு வெளிப்படுத்தும்போது அவற்றை மறைப்பதற்காக மேல்தட்டு கூட்டணிகள் உருவாவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இவற்றுக்கு மாற்றீடாக நாட்டை நேசிக்கும் கூட்டணிகள் ஒன்று சேர்ந்து நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உத்தியோகபூர்வமற்ற முறையில் தூய்மையான கூட்டணி உருவாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்த ஊழல் மோசடிக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களை பலவீனப்படுத்த இடமளிக்காது அவர்களைப் பலப்படுத்தி நாட்டுக்காக தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவது ஊடக நிறுவனங்களின் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறை விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கேற்ப சட்ட நடவடிக்கைகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் மோசமான நிலைமையைத் தவிர்ப்பதற்கு அனைத்து அர்ப்பணிப்பையும் மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## நானும் சம்பந்தனும்...

மிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தான் 5 கோடி பெற்றுக்கொண்டார் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எவ் இனர் இனியாவது அடக்கி வாசிக்க வேண்டும். இல்லை என்றால் மேலும் ஆதாரங்களை வெளியிட வேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். அவரது வீட்டில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பங்களிப்புடன் வந்த அரசாங்கம், அது தயாரித்த வரவு செலவு திட்டத்திற்கு நாங்கள் வாக்களிக்காமல் விட்டால் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனினும் குறித்த வரவு செலவு திட்டத்திற்கு நாங்கள் வாக்களிக்க போவதில்லை என ஒதுங்கியிருக்க முடிவு செய்த போதிலும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களுடைய இன பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அதே போன்று காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, என பல பிரச்சினைகள் தீர் க்கப்பட வேண்டியுள்ளது. ஆகவே வாக்களிக்காமல் விட்டால் சமாதனம் குழம்பிவிடும் என கூறி, வரவு செலவு திட்டத்திற்கு வாக்களிக்குமாறு கோரியிருந்தார்.

அதனால் தனி மனித விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தோம். இதற்காக யாரிடமும் எந்த பணத்தையும் இலஞ்சமாக பெறவில்லை.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 2 கோடி வாங்கியிருக்கலாம் ஆனால் அதனை பற்றி எனக்கு தெரியாது. இதே போன்று பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் 2 கோடி ரூபா வாங்கினார் என்று ஊடகங்களுக்கு நேரடியாக எதனையும் கூறவில்லை. நானும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் 2 கோடி வாங்கவில்லை என்றார் அவர். (ம-4)

## மகிந்த, ரணில், மைத்திரி...

அனுரகுமார திசாநாயக மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அனுர குமார திசாநாயக,

நாட்டினை கையாள்வதைப் போலவே ஊரையும் கையாள அனுமதி தாருங்கள் என பிரதான இரண்டு கட்சிகளும் மக்களுக்கு தெரிவித்து வருகின்றது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது, சர்வதேச ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது.

இவர்களின் செயற்பாடுகளினால் மக்களுக்கு இன்று அரசியல் வேண்டாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசியல் கொள்ளையர்கள் மட்டுமே இன்று ஆட்சியில் உள்ளனர்.

இவர்களின் பொருளாதார கொள்ளை மூலமாக எயார்லங்கா நிறுவனம் 12500 கோடி நட்டத்தையும், மத்திய வங்கி களவினால் முதல் ஐந்து மாதங்களில் 1100 கோடி நட்டத்தையும்,பெற்றோலிய கூட்டுத்தாபனம் 1000 கோடி நட்டத்தையும் கண்டுள்ளது.

அனைவருமே இன்று ஊழல்வாத, ஏமாற்று அரசியல் வாதிகளே உள்ளனர். இவர்கள் கேட்பதும் உருவாக்க நினைப்பதும் தமது ஊழல் கொள்ளைகளை மறைக்கவும் ஊழல் வாதிகளை காப்பற்றவுமேயாகும்.

மகிந்த அணியும், ரணில் -மைத்திரி அணியும் தத்தமது ஊழல் மோசடிகளை மறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதற்காகவே இவர்கள் ஆட்சியினை கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர் என தெரிவித்தார் . (ம)

## கலை இலக்கியப்...

விருந்தினராகவும் இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் மற்றும் தமிழகத்தின் மூத்த சட்டத்தரணி இரா.காந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

ஊர்திப் பவனியுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் உள்நாட்டு வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களின் கருத்துரைகள், கவியரங்கம் பட்டிமன்றம், மலர்வெளியீடு சாதனையாளர் கௌரவிப்பு உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (ம)

## இந்திய அரசாங்கம்...

மேலும் சகல மாகாணங்களுக்கும் சமஷ்டி அடிப்படையில் தீர்வு கிடைத்தால் வடகிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி மத்தியால் எமக்குப் பங்கம் விளைவிப்பதை நாம் தடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 68ஆவது குடியரசு தின நிகழ்வு நேற்று கிறீன் கிராஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுமார் 400 மொழிகளுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் கொண்டிருக்கக்கூடிய இந்திய நாடு மொழி மூல ஆக்கிரமிப்புக்கு இடம்கொடுக்காத வகையில் இதுவரை நடந்து கொண்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ், சிங்களம் என்ற இரு மொழிகளைப் பேசுகின்ற மக்களே பிரதான குடிகளாக வசிக்கின்ற போதும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மை இனத்தை அடக்கி ஆளும் ஒரு சமூகமாகவே இதுவரையில் இயங்கி வந்துள்ளது.

அடக்குமுறைக்கு அடிபணியாத தமிழ் இளைஞர் அணி வெகுண்டெழுந்ததன் விளைவாக இந்த நாட்டில் ஏற்பட்ட துன்ப துயர நிகழ்வுகள் அனைவரும் அறிந்ததே.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் இணைந்த வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்குரிய அதிகாரங்களை வழங்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட போதும் சிங்கள மக்களையும் சமாதானம் செய்யும் நோக்கில் மாகாண சபை அரசியல் அமைப்பு முறையானது அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன. தமிழர்களுக்கு நாம் பிரத்தியேகமாக எதனையும் வழங்கவில்லை என்று சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்ட அப்போதைய ஜனாதிபதி மேற்கொண்ட தந்திரோபாயமே அது.

அதே அடிப்படையில் ஒன்பது மாகாணங்களுக்கும் சமஷ்டி வழங்க இன்றைய எமது அரசாங்கம் முன்வர வேண்டும். எந்த இரு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்கள் ஒன்றிணையவும் வழிவகுக்க வேண்டும். ஏனென்றால் என்ன நோக்கத்திற்காக 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டதோ அந்த விடயங்கள் அனைத்தும் உரு மறைப்புச் செய்யப்பட்டு தமிழ் மக்களுக்கு தரப்பட வேண்டிய உரிமைகள் அனைத்தும் மறைக்கப்பட்ட ஒரு நிலையிலேயே நாம் இன்று இங்கு வாழ்கின்றோம். இருந்த உரித்துக்களையும் இழந்து ஏதிலிகளாக வாழுகின்ற ஓர் துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் இங்கு தள்ளப்பட்டுள்ளோம். காரணம் முத்தரப்பு நிர்வாகங்கள் இங்கு நடந்துகொண்டிருக்கின்றது.

ஆளுநர், அரசாங்க அதிபர் ஆகியோர் எமக்கு மேலதிகமாக மத்திய அரசின் அனுசரணையுடன் நிர்வாகம் செலுத்திக் கொண்டிருககின்றார்கள். ஒரு கையால் தருவது போன்று பாசாங்கு செய்து மறு கையால் இருப்பதையும் பிடுங்கி எடுக்கின்ற நடவடிக்கைகளே தொடர்ந்து இங்கு முன்னெடுக்கப்படுகின்றது. சகல மாகாணங்களுக்கும் சமஷ்டி அடிப்படையில் தீர்வு கிடைத்தால் வடகிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி மத்தியால் எமக்குப் பங்கம் விளைவிப்பதை நாம் தடுக்கலாம்.

குற்றாலத்தில் இடியிடித்தால் கோயம்புத்தூர் விளக்கு அணைவது போல ஒன்பது மாகாணங்களும் சமஷ்டி உரிமை பெற்றால் எமக்கு இழைக்கப்படும் அநீதிகள் இருப்பின் அவற்றிற்காகத் தெற்கத்தைய மாகாணங்கள் குரல் கொடுக்க முன்வருவன என்று எதிர் பார் க்கலாம். இன்று தெற்கிலுள்ள மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வு எம்மைப்போல் அத்தியவசியமாகத் தேவைப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு மாகாணச் சுயாட்சி கிடைத்தால் அவர்களின் மனோநிலை மாறும் என்று எதிர்பார்க்கலாம்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப் படையிலான அதிகாரப் பகிர்வுகளை நாம் பெற்றுக் கொள்வதற்கு இந்திய அரசு எமக்கு உதவ வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(ம-4,9)

## கெஹெலியவுக்கு...

பித்துள்ளார்.

கெஹெலிய ரம்புக்வெல்ல ஊடகத்துறை அமைச்சராக செயற்பட்ட போது, அரச அச்சக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 2,39,000 ரூபாவைப் பயன்படுத்தி அவருக்கு சொந்தமான வீட்டுக்கான மின்சாரக் கட்டணத்தை செலுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளுக்காகவே தற்போது அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

## சுற்றுலா விடுதியாக...

பெற்ற மக்கள், மக்கள் சந்திப்பொன்றிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை சுற்றுலா விடுதியாகப் பராமரிப்பதற்கு தம்மிடம் வழங்குமாறு வடக்கு மாகாண சபை கோரியிருந்த நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இதனைத் தெரிவித்துள்ளார். (ம)

## வலுவான நிலையில்...

தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இருநாட்டு தலைவர்களது பரஸ்பர விஜயத்தின் மூலம் இவ்வாறு இருதரப்பு உறவு மேலும் வலுவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய குடியரசு தினத்தின் பிரதான நிகழ்வு கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து தலைமையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 21 வயது இளம்பெண்...

குறித்த பெண்ணிடம் சகோதரன் வெளியே சென்றுவிட்டு வருவதாகத் தெரிவித்து விட்டுச் சென்று பிற்பகல் 1.30 மணியளவில் வீட்டிற்குச் சென்றபோது சமையலறையில் குறித்த பெண் சடலமாக காணப்பட்டுள்ளார்.

வவுனியா-கற்பகபுரம் பகுதியில் 5ஆம் ஒழுங்கையில் வசித்து வந்த 21 வயதான அர்ச்சுனன் கோகிலவதனி என்ற பெண்ணே மரணமானவராவார். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலத்தையும் பார்வையிட்டுள்ளனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து குறித்த பெண்ணின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் குறித்த சம்பவம் கொலையா என்ற கோணத்தில் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் பூவரசங்குள பொலிஸார் தெரிவித்தனர். (ம-250,281)


## வீடு வாடகைக்கு

பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ளபுதிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)


தொடர்புகளுக்கு :
077 069 0275
(2561)

## அபான்சின் இலத்திரனியல் பொருட்களுக்கான பிரமாண்ட மலிவு விற்பனை.

**50%** வரை தள்ளுபடி



2018 ஜனவரி **27, 28, 29** வரை
மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை



யாழ்ப்பாணம்,
இல.121/1, பவர் ஹவுஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(CTB பஸ்தரிப்பிட பின்புறம்)

தொடர்பு :
077 443 3030
021 222 0981

கைக்காசு மற்றும் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யமுடியும்.
நிபந்தனைகள் உண்டு.
(2559)

Abans

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

(C-1386)

## தவறவிடாதீர்கள்!!!

A/L எடுத்த மாணவர்களுக்கு,
இளைஞர்களுக்கு,யுவதிகளுக்கு,
கனடா செல்ல விரும்புபவர்களுக்கு
மற்றும் வெளிநாட்டுக்கு பொதிகள்
அனுப்புபவர்களுக்கு
ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.
STALL NO-279 / JANUARY 26,27,28
JAFFNA TRADE FAIR 2018
0768226240
(C-1345)

## இன்சுவை யாழ் ஒடியற் கூழ்

தினமும் காலை 11 மணி முதல்
யாழ்பாடி
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353,
075 987 5800
(C-1347)

## சிங்கள வகுப்பு

04.02.2018
Sun (4.15 pm)
NAC
கல்வி நிலையம்
மானிப்பாய்
0776947162
(2517)

## விற்பனை முகவர்கள் தேவை

சுசுக்கி மோட்டார் சைக்கிள் கம்பனிக்கு சுன்னாகம், சாவகச்சேரி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, வவுனியா ஆகிய இடங்களுக்கு விற்பனை முகவர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு : 077 316 6786
(C-1370)


## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் மாரிமுத்து செல்லையா



கடந்த 04.01.2018 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் மாரிமுத்து செல்லையா அவர்களின் மறைவுகுறித்த செய்தி அறிந்து வருகைதந்தோர், இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தியோர், இறுதிப்பயணத்தில் கலந்து கொண்டோர், ஆறுதல் அளித்த மதகுருமார்கள், தொலைபேசி வாயிலாக ஆறுதல்கள் கூறியோர், கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள், துண்டுபிரசுரங்கள், பத்திரிகை அஞ்சலி பிரசுரித்தோர், உற்றார், உறவினர்கள் அனைவர்க்கும் எமது சிரந்தாழ்ந்த நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 03.02.2018 சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 03.02.2018 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் 04.02.2018 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நிகழ்வுறும். தாங்கள் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-1385)

சித்திரவேலாயுதர் கோவிலடி,
மீசாலை கிழக்கு.

\- குடும்பத்தினர்.

## VACANCY

S & S COMPLEX
POINT PEDRO

- Manager - Food City & Theatre
- Operator - Theatre
- Cashier - Food City & Theatre
- Store Keeper - Food City
- Customer services Assistant - Theatre & Food City
- Account Assistant - Theatre & Food City
- Computer Application Assistance - Theatre & Food City

Postal Address:
Saru and Shalu's (Pvt) Ltd, Kiramakoddu Junction, Point Pedro.
&
T.Thanushan
Attorney at Law & Complex Secretary,
Thambasiddy Road,
Point Pedro.

**Email Address:**
sscomplex.pvt@gmail.com
**Facebook**
ss complex@facebook.com
**Telephone Number**
021 226 5000
(2554)

Age Limit : 18 - 40
Both Male & Female can apply
Preference will be given to who is having Experience in the relevant field.
Please send your CV by Post or Email before 11 February 2018 & mentioned Post which you are applied.


## முகவர்கள் தேவை

50'000/= வரை
மாத வருமானம்

விமானப் பயணச் சீட்டுக்கள்.
சர்வதேச விரைவுப் பொதிகள் சேவை.
உள்ளூர் விரைவுப் பொதிகள் சேவை.

- சொந்த இடத்திலேயே தொழில் வாய்ப்பு
- நிரந்தர தொழில் வாய்ப்பு.
- நீண்டகால அடிப்படையில் வருமானம் அதிகரித்துக் கொண்டே செல்லும்.
- வேண்டிய தொழிற்பயிற்சிகள் எம்மால் வழங்கப்படும்.

## இப்போது விற்பனையில்

கனடா செல்வதற்கான
இலகு வழிமுறைகள்

கனடா செல்ல விரும்பும்
அனைவரும் கட்டாயமாக
வைத்திருக்கவேண்டிய

அடிப்படை புரிதல் வழிகாட்டி

விலை 200/- மட்டும்

## CARE GIVER IN CANADA

குழந்தைகள், முதியோர்,
விசேட தேவையுள்ளோர் பராமரிப்பாளர்

கனடாவில் நிரந்தரமாக வசிக்க விரும்பும் எமது இளைஞர்,யுவதிகள்,அனைவருக்கும் பொருத்தமானதும் நடைமுறைச்சாத்தியமுள்ளதுமானஒரு வழிமுறையாகும்.

சரியான அணுகுமுறை இருப்பின்
ஒரு வருடத்தினுள் கனடா செல்லலாம்

- அடிப்படைத் தகுதி A/L சித்தி(O/L சித்தியடைந்தவரும் முயற்சி செய்யலாம்)
- குறைந்தளவு ஆங்கில அறிவு போதுமானது (IELTS - 5.5)
- 2 வருட வேலைவாய்ப்புடனான விசா
- 2 வருடத்தின் பின்னர் நிரந்தர விசா(Permanent Resident)
- 2 வருடத்தின் பின்னர் குடும்பத்தினரை நிரந்தரமாக சாதாரண
- கட்டணத்துடன் கனடாவிற்கு அழைக்கலாம்.
- மிகக் குறைந்த செலவு (10000 CAD - 20000 CAD)
- மிகக் குறைந்த காலம் போதுமானது.

(C-1345)

NURSE ஆக பணிபுரிபவர்கள் நேரடியாகவே கனடாவில் CARE GIVER ஆக பணிபுரிவதற்கு தகுதி பெற்றவர்கள் - உடனடியாக விண்ணப்பிக்கலாம்.

கற்கைநெறி - 1 வருடம் / கல்விக்கட்டணம் 250'000/=



வகுப்பு கல்வி (NVQ Level 4)- 6 மாதம்
Language & Communications skill
First Aid & Emergency
Home Management
Elder Care , Child Care , Care for people in special needs
வேலை அனுபவ பயிற்சி - 06 மாதம்

எம்மை நேரடியாக சந்தியுங்கள் >> யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி STALL - 279 இன்றும்,நாளையும் (27,28 ஆம் திகதிகளில்) >>V2 TRAVELS 0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.